Camanarmalai Celvom

T. S. SRI PAL

V21133.g1C
3J4

# சமணர்மலை செல்வோம்

## (JAIN HILL)

ஆசிரியர்

ஜீவபந்து T. S. ஸ்ரீபால்

Published by :

**CHHOTELAL JAIN**

HONY. GENERAL SECRETARY

VIRA SASANA SANGHA

CALCUTTA.

1954.

First Edition—Dec. 1954.

Printed at the Rajan Electric Press, Madras-1.

# PREFACE

S'amanar Malai' — The Jain Hill — is a sacred hill of historical importance. It is situated five miles to the west of Madurai. Anyone making a bus-journey from Madura to Periakulam cannot miss the hill on his way. If he alights at a small village named Pudukkottai and walks about a furlong southwards, he can easily reach the spot. For over two thousand years it has been the abode of several Jain saints and it contains the sacred images of several Tirthankkaras like Ādināthа and Pārs'vanātha. There are also some important Brami and Vattezuthu inscriptions on the rocks. This hill of ancient reminiscences now lies in comparative obscurity and there are very few who know its importance. Recently quite unexpectedly, I had the opportunity of visiting the hill when I was shocked to find that quarrying for gravel was in full swing regardless of its importance. Immediately I exerted myself and represented the matter to the Department of Archeaology, Southern circle, Madras and the district collector of Mudura and steps were immediately taken by them to stop further destruction and the hill

was finally brought under 'Protected Monuments.' This book is the result of my visit to the sacred hill and I have explained here its importance and of the inscriptions on it.

I hope and trust that this will bring out clearly to the readers the great services rendered by Jain Saints not only to the Tamil Language but also to the general welfare and prosperity of the Tamil country.

It is more than a year since I prepared the manuscript but as I lacked facilities to publish it, it was lying idle with me. The unexpected help that I have now received to bring out this publication is as unforeseen as my visit to the sacred hill. At the end of last April that great savant and philanthropist and a friend of humanity in general and Jainism in particular, Sri Chotelaljee Jain, General Secretary, Vīra S'āsana Saṅgha of Calcutta, paid a visit to Madras. On behalf of **Thruthakkadevar Ilakkiya Mandram,** (literary Association) Madras, an address of welcome and falicitations was also presented to him by Sha Mohanmulji Chordia, founder of the Madras Jain College, on the 22nd May, 1954. His magnificent work for the preservation and propagation of Jainism and Jain Culture is well known. His love for humanity is equalled only by

his enthusiasm for the study and preservation of ancient monuments, temples, inscriptions, paintings and manuscripts and commands in no small measure our gratitude. The printing of this book was naturally gladly undertaken by him as he felt that it is only such publications that could rouse interest in the minds of people who are ignorant of the historical importance of our several sacred monuments. I cannot be sufficiently grateful to him for his kindness and encouragement.

I have supplemented my work with extracts from literary sources. The History of 'S'amanar Malai', and the evidences from inscriptions, so kindly sent to me by Sri M. Venkataramayya, M.A., M. Litt.. Assistant Epigraphist, Government of India, Ootacamund are included at the end of this book. Sri K. R. Srinivasan, M.A., Superintendent, Department of Archaeology has kindly helped me in writing the inscriptions in romanscript, adding the diacritical marks and translating them in English which are published in the last pages.

My thanks are due in no small measure to the Vīra Sāsana Saṅgha of Calcutta, for having financed me in bringing out this booklet. I offer my thanks to Sri M. Venkataramayya, Assistant Epigraphist, for his article and

inscriptions and to Sri K.R. Srinivasan for the translations. I wish to make a special mention of my thanks to my other friends who have helped me in the publication of this book. Sri Vidwan T. L. Loganathan of the Hindu Theological High School, Madras and Sri Vidwan Dhanakoti, Tamil pandit, the T. T. V. High School, Madras, have kindly assisted me in correcting the proofs. Sri K.A. Varthamanan Jain and Sri P. Baskaranath Jain have kindly corrected the English proofs. I thank these and all others who have helped me in one way or other in this project.

On the last page of the book, I have included some Jaina images that are found in the Hills at Uthamapalayam, in Madurai district. Mr. Mohammed Ismail, Secretary, Karutha Rowther Howdia High School, Uthamapalayam not only brought to my notice of these Jaina images but very kindly sent me also their photos and my grateful thanks are due to him in no small measure.

T. S. Sripal,

Madras.
10—11—1954.

# சமணர்மலை செல்வோம்

## சமணர் யார்

சமணம் என்னும் சொல் 'சிரமண' என்னும் வட சொல்லின் திரிபாகும். "சிரமண" என்பதற்கு இன்பம், துன்பம் ஆகிய இரண்டையும் சமத்துவமாக ஏற்பவர்; நட்பு, பகை அற்றவர், இகழ்வாரை வெகுள்வதும் புகழ்வாரை அருள்வதும் இல்லாதவர்; அன்பும், அருளும், அடக்கமும் உடையவர்; இறப்பையும் பிறப்பையும் பொருட்படுத்தாதவர்; உலகில் நல்லவற்றையே செய்ய வேண்டுமென்பதற்காக எல்லாச் சுகங்களையும் துறந்தவர்; ஐம்புலன்களைத் தன்வயப் படுத்தியவர்; 'யான்' 'எனது' என்னும் செருக்கு அறுத்தவர்; தமக்கு வரும் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொள்பவர்; எக்காரணத்தாலும் எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாதவர்; படநாகந் தோலுரித்தாற் போல் உள்ளும் புறமும் துறந்து பட்டினி நோன்புடன் ஒழுக்கங்காப்பவர்; தமது ஆன்மாவிற்குத் தொடர்புடையதாக இருக்கும் உடலையும் மிகையாகக் கருதித் தவம் இயற்றுபவர் என்னும் பலபொருள்கள் உண்டு. இப் பொருள்களால் முற்றும் துறந்த முனிவர்களையே வட மொழியில் 'சிரமண' என்று அழைத்து வந்தனர் என்பது தெளிவு. இத்தூயோரையே தமிழ்மொழியில் 'துறவோர்' என்று அழைத்து வந்தனர். எனவே, சமணர் என்பதும் துறவோர் என்பதும் மொழியால்

வேறுபடினும் பொருளால் ஒரே கருத்தை விளக்குவன வாகும். மேலும் இச்சொற்கள் ஒரு சமயத்தையோ, மதத்தையோ சார்ந்தனவல்ல என்பதும், துறவறத்தின் இயல்பை விளக்கும் பொதுச் சொற்களே என்பதும் பெறப்படும்.

ஆதியில் இத்துறவற நெறியையும் இல்லறநெறி யையும் வகுத்தருளியவர் **பகவான் விருஷபதேவர்.** அவர், நம்மைப் போன்று தாய் தந்தை வயிற்றிற் பிறந்து, மனைவி மக்களுடன் வாழ்ந்தவர்; அஹிம்ஸா தர்மத்தின் தந்தை * அகரமுதலாகிய எழுத்துக்களை யும், ஒன்று முதலாகிய எண்களையும் தோற்றுவித்த முதற் பேராசிரியர்; வாள், வரைவு, உழவு, வாணிபம், கல்வி, சிற்பம், ஆகிய அறுதொழில்களையும் கற்பித்து, வாழ்வுக்கு வழிகாட்டிய வள்ளல்; மக்கள் நல மேம்பாட்டிற்குரிய இல்லறம் துறவறம் ஆகிய இரு பேரறங்களையும் வகுத்தருளிய அறவாழி அந்தணர்; தேவைக்கு மேலாகப் பொருள்களைப் பதுக்கி வைத்தல், ஐம்பெரும் பாவங்களில் ஒன்றெனக் கூறி **'மிகு பொருள் விரும்பாமை'** என்னும் அரியதோர் அறம் வகுத்த முதற் பொதுவுடைமைத் தலைவர்; செய்தொழில் வேற்றுமை யன்றிப் பிறப்பினால் மக்களனைவரும் ஒன்றென உரைத்த உத்தமர்; கண்கள் எவ்வாறு பிற பொருள் களைத் தெளிவாக அறிகின்றனவோ அவ்வாறே நூற் பொருள்களின் உண்மைகளை ஆராய்ந்தறிய வேண்டு

---

* "திருக்கிளர் தேவர் கோமான் ஏவலிற் குபேரன் செய்த, விருப்புறு பொன்னெயிற்குள் விளங்கவெண் ணெழுத்திரண்டும், பரப்பிய ஆதிமூர்த்தி"—சூடாமணி நிகண்டு.

மென்னும் பகுத்தறிவியக்கத்தின் கர்த்தர்; ஆத்மீக மேம்பாட்டிற்காகத் துறவற நெறியை மேற்கொண்டு தவ ஒழுக்கத்தால்; சிறந்துயர்ந்த பரமாத்மா; கேவல ஞானத்தால் (முழுதுணர் ஞானம்) வீடு பேறு பெற்றவர்; பலதிறப்பட்ட இந்திய இலக்கியங்களிலும் போற்றப்பெறும் வரலாற்றுப் பெருந்தலைவர். இப் பேரறிவன் திருமொழியே உலகக் கலைகளுக்கெல்லாம் முதல் நூலாகும். இவ்வுண்மையை,

**"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூ லாகும்"**

எனத் தொல்காப்பியரும்,

**"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"**

எனத் திருக்குறள் ஆசிரியர் தேவரும்,

**"ஆதிவேதம் பயந்தோய் நீ"**

எனத் திருதக்க தேவரும்,

**"ஆதியங்கடவுளை அருமறை பயந்தனை"**

எனத் தோலா மொழித் தேவரும், போற்றி இருப்பதினின்றும் அறியலாம். எனவே **பகவான் விருஷப தேவர்** அருளிய துறவற நெறியை மேற்கொண்ட துறவிகளையே உண்மைத் தவத்தோர் என உலகம் ஏற்றுக் கொண்டது. முற்றும் துறந்த அம்முனிவர்களையே சமணர் என்றும் துறவோர் என்றும் போற்றினர்.

**அறவோர்**

கல்வி அறிவும் தவ ஒழுக்கமும் நிறைந்த சமண முனிவர்கள் பரத கண்டமெங்கும் பரவியிருந்தனர்

சிறப்பாகத் தமிழகத்தில் தலைசிறந்து விளங்கினர். இத்தமிழ் முனிவர்கள் பகவான் விருஷப தேவர் அருளிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் அடிப்படையில் தோன்றிய தொல்காப்பிய மும், திருக்குறளும் கூறும் தவவொழுக்கத்தில் சிறந் தும் பிறழாத நோன்புடையவர்கள்; அஹிம்ஸா மூர்த்தி கள்; அறிவால் நிறைந்த அறமாண்புடையோர். ஆன்ம தத்துவமும் அறிவியல் தத்துவமும் அவர்கள்பாற் பொலிவுற்று விளங்கின. தர்க்க சாஸ்திரம், தத்துவ வாதம், நியாயவாதம், கிரியாவாதம் முதலியன அவர் கள்பாற் சிறந்திருந்தன. இன்றைய உலகில் நிலவும் அணுத்திரள்களின் ஆற்றலை என்றோ கண்டறிந்த விஞ் ஞானிகள் இம்முனிவர்கள். இவர்கள் சென்றகால, வருங்கால நிகழ்ச்சிகளை அறியும் பேரறிவு படைத்தவர் கள்; வானம் நிலம் ஆகிய வற்றின் இயல்புகளைத் தங் கள் ஞானத்தால் அளந்து அறிந்தவர்கள்.

**"இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு"**

**"சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு"**

**"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்"**

என்னும் வாய்மொழிக்கு இலக்கியமாய் இருப்பவர் இஞ் ஞானிகள்.

இம் மாசறுகாட்சியவர் தமிழ்நாடெங்கும் உள்ள மலைகளிலும், குகைகளிலும், கிராமங்களிலும், பள்ளி கள், சங்கங்கள், அறங்கூறு அவைகள் ஆகியவற்றை

அமைத்து மக்கள் பண்பாட்டிற்குரிய அறநெறிகளை வளர்த்து வந்தனர். இவ்வறவோர் பல்வேறு காலங்களில் அமைத்த* மூல சங்கம், சேனசங்கம், வீரசங்கம், நந்திசங்கம், முனிசங்கம், **திராவிடசங்கம்,** அருங்கலாவன்வயம் போன்ற பல நிலையங்கள் தமிழ்நாட்டு வரலாற்றில் முதலிடம் பெற்றவை. புலனூண் துறந்து பொய்யா விரதத்தையுடைய இவ்வறவோர்கள் காலைப் பொழுதும் மாலைப்பொழுதும் கல்விப் பொருளே செல்வப் பெருளாய்க் கொண்டு வெவ்வேறு காலங்களில் இயற்றருளிய காவியங்களும், நீதிநூல்களும், வான நூல்களும், உயிரியல்-அறிவியல்-அரசியல் - உலகியல் நூல்களும், இலக்கண இலக்கியங்களும், கணித, சோதிட நூல்களும், இயல், இசை, நாடக நூல்களும், வைத்திய நூல்களும் கணக்கில. இந்நூல்கள் யாவும் உலகுக்கே உரியவை. இத்தவத்தோர், ஆதிப் பெருமானாகிய பகவான் விருஷபதேவர் அருளிய திருவறத்தின் வழி நின்றவர்களாகையால் இந்நூல்களில் சமய சார்பையோ, மதச் சார்பையோ சிறிதும் காணமுடியாது. இவை,

> **"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"**
> எனும் பொதுமை பொலியும் பேரறமுடையன
> வாகும்

பகவான் விருஷபதேவர் திரு அறம் உலகுக்கே உரியவை (Universal.) என்னும் உண்மையைக் கலிங்கத்துப் பரணி இயற்றியருளிய கவிச்சக்கரவர்த்தி ஜெயங்கொண்டார்,

---

NB.* The Jaina Religion and Literature. The Journal of the Bihar and Orissa Research Society. XVIII.P. 74.

**"பொய்யும் கொலையும் களவும் தவிரப்**
**பொய்தீர் அறநூல் செய்வோர்"** என்றும்

**"நிலைசேர் பொருளும் நிலையில் பொருளும்**
**நிமலன் நெறியால் உலகுக்கு உரைசெய்**
**தலையாகிய மாதவர்............**

என்றும் புகழ்ந்துள்ள உரைகளால் அறியலாம். அதனாற்றான் அறிஞர் உலகம் தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, சூளாமணி, நாலடியார், பழமொழி நானூறு, ஏலாதி, அறநெறிச்சாரம், யசோதர காவியம் போன்ற பல நூல்களைப் பொது நூல்களாகவே மதித்துப் போற்றுகின்றது. மேலும் தமிழ் மொழியின் தொன்மையையும், மாண்பினையும், கலைத்திறனையும், தமிழர் பண்பாட்டின் மேன்மையையும், போற்றுதற்குரிய பாக்கியத்தைத் தேடித் தந்தவர்கள் முன்னர்க் கூறிய சங்கங்களில் வீற்றிருந்த மாமுனிவர்களே யாவார்கள். அவர்கள் ஆதி அகத்தியர், தொல்காப்பியர், அவிநயனார், திருக்குறள் ஆசிரியர், தேவர், குந்தகுந்தாச்சாரியார், சமந்தபத்திராச்சாரியார், ஜினசேனாச்சாரியார், அகளங்கதேவர், கொங்கு வேளிர், திருத்தக்க தேவர், தோலாமொழித் தேவர், வச்சிரணந்தி, பவணந்தி, அமிர்தசாகரர், குணசாகரர், ஜெயங்கொண்டார், வாமனமுனிவர் போன்ற பல சமண அறவோர்களே ஆவார்கள். தமிழ்மொழி, வடமொழி மற்றும் பலமொழிகளிலும், புலமைசான்ற இத் தமிழ் முனிவர்களின் உண்மை வரலாற்றை அறிந்துகொள்ள முடியவில்லை. திருக்குறள் ஆசிரியர் தேவரின் வரலாற்றை எவ்வாறு அறிய முடியவில்லையோ அதுபோன்று பல ஆசிரியர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள வியலவில்லை. தன்னலமற்ற அத்தவத்தோர்

தாங்கள் இயற்றிய நூல்களில் தங்களைப்பற்றியோ, தங்கள் வாழ்க்கையைக்குறித்தோ எங்கும் விளக்கவில்லை. மக்கள் வாழ்க்கை நலத்தையும், பண்பினையும் வளர்க்கும் கருத்துக்களைப் பரப்ப விரும்பினரேயன்றித் தங்களைப் பற்றி அறிமுகப் படுத்திக்கொள்ளச் சிறிதும் ஆசைப் படவேயில்லை. இஃது தவத்தின் இயல்பு போலும்.

பகவான் விருஷப தேவர் அருளிய இல்லறம், துறவறம், ஆகிய இரு பேரறங்களை உடையோரை முறையே **சாவகர்** என்றும், **சமணர்** என்றும் அழைப்பர். சாவகர் என்போர் இல்லற விரதம் குன்றாதவர்கள். சமணர் என்போர் நாம் இதுவரை கூறிவந்த மெய்த் துறவிகள். இம்முழுதுணர் ஞானிகள் தமிழகம் எங்கும் பரவி இருப்பினும் சிறப்பாகப் பாண்டிய நாட்டில் மிகுதியாகக் காட்சியளித்தனர். இவ்வறவோர்களை மதுரைக் காஞ்சி ஆசிரியர் மாங்குடி மருதனார்,

**''வண்டு படப் பழுநிய தேனார் தோற்றத்துப்**
**பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்**
*** சென்ற காலமும் வரூஉ மமயமும்,**
**இன்றிவட் டோன்றிய ஒழுக்கமொடு நன்குணர்ந்து**
**வானமு நிலனுந் தாமுழு துணரும்**
**சான்ற கொள்கைச் சாயா யாக்கை**
**ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்**
**கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்**
**பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்**
**கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்**
**செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து**

---

* மனப்பர்யை ஞானம், அவதிஞானம், கேவல ஞானம். மதுரைக் காஞ்சி வரிகள் 475—492.

**நோக்கு விசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி**
**இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்**
**குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற**
**அச்சமு மவலமு மார்வமு நீக்கிச்**
**செற்றமு உவகையுஞ் செய்யாது காத்து**
**ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்**
**சிறந்த கொள்கை யறங்கூ றவையமும்"**

*எனச் சிறப்பித்துப் புகழ்கிறார். துறவோர்களில் பெண் துறவிகளும் அறப்பணியாற்றி வந்தனர். இதுபோன்ற தமிழகத்தின் தனிப்பெருங்காவியமும், வரலாற்று இலக்கியமுமாகிய சிலப்பதிகாரச் செந்தமிழ்க் காவியத்தை அருளிய இளங்கோவடிகள், கவுந்தியடிகள் என்னும் பெண்துறவியார் வாயிலாக மதுரை மூதூரில் கோயில் கொண்டுள்ள அருகப் பெருமானையும் அறவுரை பகரும் அறவோர்களையும் அறிமுகப்படுத்தும் அழகிய பகுதிகளைக் காண்போம்.*

**ஜைன மும்மணிகள்**

*ஒரு நாள் நள்ளிரவு கடையாமத் துவக்கம். கோவலனும் கண்ணகியும் தங்கள் இல்லத்தை விட்டு வெளியேறுகின்றனர். ஊழ்வினை உந்துகிறது! கடை கழிந்தறியாக் காரிகையைப் பல காவதம் நடத்திச் செல்லத்துணிந்து விட்டான் கோவலன். மதுரை அண்மையிலா இருக்கிறது? ஆறைங்காதம் செல்லல் வேண்டும். பாவம்! கண்ணகி, தன் கணவன் புறப்படலாம் என்றவுடன் புறப்பட்டுவிட்டாள். பல ஆண்டுகள் மாதவியின் மயக்கத்தால் தன்னைப் பிரிந்திருந்தவர், மறந்திருந்தவர் என்பதையும் எண்ணவில்லை! புன்முறுவலுடன் கணவனைத் தொடர்ந்தாள்.*

பொழுது புலர்வதற்குள் காவிரிப்பூம் பட்டினத்தை விட்டுப் பல மைல்கள் செல்ல வேண்டுமென்பது அவர்கள் திட்டம். ஆகவே வேகமாக நடக்கின்றனர். வீதிகளில் அருகர் கோயில், புத்தர் கோயில், திருமால் கோயில் முதலியவை காணப்படுகின்றன. தங்கள் அவசரமான பிரயாணத்தையும் மறந்து தாங்கள் வழிபடும் அருகர் கோயிலை அடைந்து,

**"புலவூண் டுறந்து பொய்யா விரதத்**
**தவலை நீத்தறிந் தடக்கிய கொள்கை**
**மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய**
**வைவகை நின்ற வருகத் தானத்துச்**
**சந்தியைந்தும் தம்முடன் கூடி**
**வந்துதலை மயங்கிய வான்பெரு மன்றத்துப்**
**பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்**
**நீரணி விழவினு நெடுந்தேர் விழவினுஞ்**
**சாரணர் வரூஉந் தகுதி உண்டாமென**
**உலக நோன்பிகள் ஒருங்குட னிட்ட**
**விலகொளி சிலாதலந் தொழுது வலங்கொண்டு"**

சென்றனர். மற்ற மணிவண்ண னென்னுந் திருநாமத்தையுடைய திருமாலினது கோயிலையும், புத்தரைச் சார்ந்த ஏழு விகாரங்களையும், தங்களுக்கு * வலத்திட்டுச் சென்று ஊர்வாயில் கடந்தனர். காவிரியாற்றின் கடைமுகத்தினின்றும் ஒரு காவதம் வந்து சேர்ந்தனர். ஒரு சோலையை அணுகினர். அங்கே தவவேடம் பூண்டுள்ள கவுந்தியடிகளைக் கண்டு இருவரும் பணிவுடன் அடிதொழுதனர். அடிகள்

* அக்கோயிலுக்குத் தங்கள் மரியாதையைக் காட்டும் நிமித்தம் தங்களுக்கு வலப்பக்கமாக விட்டுச் சென்றனர். (அடியார்க்கு நல்லார் உரைகாண்க.)

(ஆரியாங்கனை) இருவரையும் உற்று நோக்கினர். அவர்கள் தோற்றத்தால் உயர்குடி மக்கள் என்பதையும் தன்னைப் பக்தியுடன் பணிந்த முறைமையால் அவர்கள் சிராவகர்களென்பதையும், எவ்விதப் பாது காப்புமின்றி இருவரும் தனித்து வந்துள்ளதால் ஏதோ நிலைதவறியுள்ளனர் என்பதையும் அறிந்து கொண்டார். அடிகளுக்கு இரக்கம் குடிகொண்டது. தவத்தின் இயல்பு அருள் அல்லவா, அவ்வருளையுடைய மாதவத்தோராகிய அவர் அவர்களை நோக்கி உருக்கத்துடன் உரையாடுகின்றார்.

**"உருவுங் குலனும் உயர்பே ரொழுக்கமும்**
**பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்**
**உடையீர், என்னோ உறுகணாளரிற்**
**கடைகழிந் திங்ஙனம் கருதிய வாறு"** என்றார்

"அருகப்பெருமான் அருள் செய்த அறநெறிகளினின்றும் தவறாது ஒழுகும் நீவிர் இவ்வாறு துயருழந்து வருவதற்குக் காரணம் யாது?" என வினவினர். அடிகளின் அருள்மொழியைச் செவியேற்ற கோவலன் தனது நிலையை வெளிப்படுத்தாமல், "தவத் தலைவீர்! அடியேன் பொருள்தேடும் வேட்கையோடு மதுரைமா நகரம் செல்கின்றேன்" என்றான். இதனைக் கேட்ட கவுந்தியடிகள் நீங்கள் போகும் வழியில் அடர்ந்த காடுகள் இருக்கின்றன; வழிகளெல்லாம் கற்கள் நிறைந்திருக்கும்; நும் மனைவியின் மெல்லிய பாதங்கள் இக் கடும்பாதைகளைக் கடந்து செல்வதற்கேற்றவை யல்ல. வழியில் இடையூறுகளும் நேரலாம். நீங்கள் வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள் என்றாலும் செல்லமாட்டீர்கள் போலத் தோன்றுகிறது. எனினும் இந்நிலைமையில் ஒன்று கூற விரும்புகின்றேன்.

தென் தமிழ் நன்னாட்டு மதுரை மூதூர் அற வோர்கள் நிறைந்த இடம். அவர்கள் புண்ணிய மொழி களைக் கேட்கவும், அங்குள்ள அருக தேவனை வழிபட வும் யான் விருப்பங்கொண்டுள்ளேன். எனவே யானும் உங்களுடன் வருகின்றேன் என்றார்.

**"மறவுரை நீத்த மாசறு கேள்வியர்**
**அறவுரை கேட்டாங்கு அறிவனை யேத்த**
**தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு**
**ஒன்றிய துள்ளம் உடையேன்"** என்றார்.

இம்மொழியைக் கேட்ட கோவலனுக்கு அடங்கா மகிழ்ச்சியுண்டாயிற்று. பின்னரும் கவுந்தியைக் கைதொழுது, "அடிகளே! தங்கள் திருவருள் எங் களுக்குக் கிடைக்குமாயின் எங்கள் துயரமெல்லாம் பறந்தோடிவிடும்" என ஆர்வமோடு மொழிந்தான். பின்னர் கவுந்தியடிகள் வழியில் உள்ள இடர்களை எல்லாம் விளக்கிக் கூறிவிட்டுக் கையில் கமண்டலத்தை யும், மயிற்பீலியையும் எடுத்துக்கொண்டு, அறநூல் கள் நிறைந்த ஏட்டுச் சுவடிகளையுடைய உறியைத் தோளில் தாங்கிய வண்ணம், "மொழிப் பொருள் தெய் வம் வழித் துணையா" கென வழிநடந்தனர்.

**"தோமறு கடிகையும் சுவர்மேல் அறுவையும்**
**காவுந்தி ஐயைக் கைப்பீலியுங் கொண்டு**
***மொழிப்பொருள் தெய்வம் வழித்துணை யாகெனப்**
**பழிப்பு அருஞ்சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்"**

---

*நமோ அரஹந்தானம். நமோ சித்தாணம், நமோ ஆயிர் யாணம், நமோ உபாத்தியாயாணம், நமோலோயே சவ்வசா ஹூணம் (அடியார்க்கு நல்லார் உரை)

"குறை கூறுவதற்கு அரிதாகிய சிறப்பினையுடைய கவுந்தியடிகள் மொழிப் பொருள் தெய்வ மந்திரமாகிய பஞ்ச நமஸ்கார மந்திரங்களைப் பிரார்த்தித்துக் கொண்டு சென்றனர்" என்றார் இளங்கோவடிகள்.

இப்பேருரைகளால் மதுரைமூதூர் ஜைன அறவோர்கள் நிறைந்த உயர்பதி யென்பதையும், கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி ஆகிய மூவரும் ஜைன சமயச்சான்றோர்கள் என்பதையும் நன்கு அறிகின்றோம். இளங்கோவடிகளின் இணையற்ற அகச்சான்றுகளைப் படித்தறிந்தும் சிலர் பிற்கால இலக்கியமாகிய மணிமேகலை ஆசிரியர் கூற்றைக் கொண்டு வணிகர்குல திலகங்களாகிய கோவலனையும் கண்ணகியையும் பௌத்த சமயத்தவரெனப் பேசுவதும் அதன்படி எழுதுவதும் நமக்கு வியப்பைத் தருகின்றது. தமிழ் நாட்டின் பழம்பதியாய் விளங்கும் மதுரைமா நகரும் அதன் பகுதிகளும் ஜைன சமயத்தின் தலைமைத் தலங்களாக விளங்கின எனும் உண்மையை, மேலும் விளக்க மதுரைக் காண்டத்தின் தொடக்கத்தில்,

**"திங்கள் மூன்றடுக்கிய திருமுகக்குடைக் கீழ்ச்**
**செங்கதிர் ஞாயிற்றுத்திகழொளி சிறந்து**
**கோதை தாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த**
**ஆதியிற் றோற்றத்து அறிவனை வணங்கி"**

என அருகனை வணங்கி உறுதிபடுத்துகின்றார் இளங்கோவடிகள்.

பெருந்தொகை நூலில்

**"பரங்குன்று ஒருவகம் பப்பாரம் பள்ளி**
**அருங்குன்றம் பேராந்தை ஆனை—இருங்குன்றம்**
**என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்**
**சென்றெட்டுமோ பிறவித் தீங்கு"**

எனவும் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இதனுல் மதுரைப் பகுதியில் காணும் திருப்பரங்குன்றம், ஓருவகம், பப்பாரம், சமணர் பள்ளி, அருங்குன்றம், பேரானந்தம், ஆனைமலை, அழகர் மலை, ஆகிய எண் குன்றங்களும் அறவோர்கள் நிறைந்த பள்ளிக ளாகவும் ஆருகக் கடவுளின் திருப்பதிகளாகவும் விளங்குவதால் அம் மாண்புறு மலைகளின் பெருமை யினைப் புகழ்வாருக்கும் சிந்தையிலிறுத்தி அறவழி நிற் போர்க்கும், பிறவித்தீங்கு அணுகாது என்கின்றுர்.

**சீன யாத்திரிகர்**

ஏனவே இதுவரை யாம் கண்ட இலக்கிய ஆதாரங் களை மெய்ப்பிக்கச் சீன யாத்திரிகர் யுவான் சுவாங்கின் இந்திய விஜயம் பெருந்துணையாகிறது. அவர் நமது நாட் டிற்குக் கி. பி. 7-ஆம் நூற்ருண்டின் இறுதியில் விஜயம் செய்து மதுரை, காஞ்சிபுரம் முதலிய நகரங்களில் சுற் றுப்பிரயாணம் செய்தார். அவர் தமது குறிப்புப் புத்த கத்தில் மதுரையிலும், காஞ்சிபுரத்திலும் ஜைன சமயம் மிகச்செல்வாக்குப் பெற்று விளங்குகிறது என எழுதி யுள்ளார்.

**அறவோர் பள்ளிகள்**

இவ்வாறு பண்டைய இலக்கியங்களிலும், வர லாற்றுச் செய்திகளிலும், பொறிக்கப்பெற்றுள்ள உண் மைகளை எந்நாளும் கண்டுகளிக்கும் வண்ணம் மதுரை யிலும், அம் மாநகரைச் சுற்றிலும் உள்ள தீர்த்தங்கரர் சிலைகள், ஜினர் கோயில்கள் மலைகள், குகைகள், கல் வெட்டுச் செய்திகள், ஓவியங்கள், பள்ளிகள் ஆகியவை இன்றும் நின்று நிலவுகின்றன. பெருந்தொகை நூலில் கண்ட எண் குன்றங்களுடன் விருஷபர் மலை, பசு மலை, சமண மலை எனப் பல குன்றுகள் பண்டைய வரலாற்றுச்

சின்னங்களுடன் அறவோர் உருவங்களைத் தாங்கிக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.

இவைகளைக்கொண்டு தமிழ் நாடும், ஜைன சமயமும் ஒன்றை ஒன்று பிரிக்கவொண்ணாத நிலையில் பண்டைய காலந்தொட்டுத் தொடர்பு கொண்டுள்ளது என்பது விளங்கும். ஜைன சமயத்தின் வரலாற்றை ஆராயவேண்டுமாயின் தமிழ் நாட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். புதுகோட்டை, சித்தன்னவாசல் கல்வெட்டுக்களில், கி. மு. மூன்றும் நூற்றாண்டில் பொறிக்கப் பெற்ற பிராமி கல்வெட்டுச் செய்திகள் கிடைத்துள்ளன. இக் கல்வெட்டே இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் மிகப் பழமையானதென்று, கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணர்கள் ஒரு முகமாக ஒப்பீக் கொண்டுள்ளார்கள். இவ்வாறு சுமார் இருபது பிராமி கல்வெட்டுக்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளன. எனவே ஜைன சமய வரலாற்றைத் தமிழகத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கூறுவதில் எவ்வித அபிப்பிராய பேதமும் இருப்பதற்கில்லை. மேலும் முதல் அகத்தியர் வரலாற்றைக் கொண்டு ஆராயின் கிருஷ்ண பகவான் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் ஜைன சமயம் சிறப்புற்றிருந்ததென்று விளங்குகிறது. முதல் அகத்தியர், கிருஷ்ண பகவானின் உத்தரவின் பேரில் சுமார் 18 குடும்பங்களுடன் தமிழகத்தில் குடியேறினர் என்னும் வரலாற்றால் ஜைன சமயம் தமிழகத்தின் பழமையான சமயம் என்பது வெளியாகிறது. இதனால் சந்திரகுப்த மகாராஜன் காலத்தில் **பத்ரபாகு சுவாமிகளின்** தென்னாட்டு விஜயம் முதற்கொண்டே ஜைன சமயம் தொடர்பு கொண்டது என்னும் வரலாறு பெருந்தவறாகும். ஜைன சமயம் முதல் அகத்தியர் காலத்

திற்கு முந்திய தமிழகத்தில் வளர்ந்து வந்திருக்கிறது என்பதுதான் உண்மையாகும். இக் கருத்தை உறுதிப் படுத்தும் வகையில் திருக்கலம்பக ஆசிரியர்,

**மயிலாபுரி நின்றவரரியாசனவும் பரின்**
**மலர் போதிலிருந்தவ ரலர் பூவினடந்தவ**
**ரயிலார் விழிமென் கொடி மிடைதீபை நயந்தவ**
**ரமராபதி யிந்திரனணி யாடலு கந்தவர்**
**கயிலாய மெனுந்திரு மலைமேலுறை கின்றவர்**
**கணநாயகர் தென்றமிழ் மலைநாயகர் செம்பொனி**
**னெயிலாரில குஞ்சின கிரியாள்பவர் சம்பைய**
**ரெனையாள நினைந்துகொல் வினையே னுளமமர்ந்ததே**

— திருக்கலம்பகம்

என்னும் தோத்திரப் பாவினால் தென் தமிழ் மலை நாயகன் எனப் பொதிகை மலையில் கோயில் கொண் டுள்ள பகவான் நேமி தீர்த்தங்கரரை வழிபடுகிறார். பகவான் நேமிநாதர் கிருஷ்ண பகவானின் ஒன்று விட்ட சகோதரர். கிருஷ்ண பகவானுக்கு இளையவ ராயினும் சம காலத்தவர். பகவான் நேமிநாதர், கிருஷ்ண பகவான் ஆகிய இருவரின் வரலாறுகளும் ஹரிவம்ஸ புராணத்தில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. நேமிநாதர், பகவான் விருஷபதேவர் அறநெறிகளை மேற்கொண்டு கடுந்தவம் புரிந்து பரி நிர்வாண மடைந் தவர்; இருபத்திரண்டாவது தீர்த்தங்கரர்; இவர் காலம் முதல் அகத்தியரின் காலமாதல் வேண்டும். இவர்பகவா னின் அறவுரைகளைக் கேட்டு வழிபாடியற்றும் பாக்கியமும் பெற்றிருக்கலாம். எனவே அகத்தியர் பொதிகை மலையில் வீற்றிருந்து தமிழ் வளர்த்த காலத்தில் தம்முடைய நாட்டைச் சார்ந்தவரும் தாம்

நேரே கண்டு வழிபாடியற்றிய பகவான் நேமிநாதற்குப் பொதிகையில் சின்னங்கள் அமைந்திருக்கலாம். எனவே திருக்கலம்பக ஆசிரியர் பகவான் நேமிநாதர் கோயில் கொண்டுள்ள மயிலாப்பூர், தீபங்குடி, திருமலை, சினகிரி, சம்பை முதலிய பாடல் பெற்ற திருப்பதிகளைக் குறிப்பிடுகையில் முதல் அகத்தியரால் பூசிக்கப்பெற்ற நேமிநாதரின் திருப்பதியை யையும் விளக்கத் தென்தமிழ் மலைநாயகன் எனச் சிறப்பித்துப் போற்றுகின்றார்.

இவ் வரலாற்றால், ஜைன சமயம் முதல் அகத்தியர் காலத்திலிருந்தே தமிழகமெங்கும் பரவியிருந்ததென்பதும், ஜைன அறவோர்களின் பள்ளிகளும், கலை வளர் மன்றங்களும், அறங்கூறு அவைகளும் நிலைநிறந்திருந்தன வென்பதும் நன்கு புலப்படுகின்றன. இவ்வாறு தமிழ் நாட்டுப் பெரு மக்களின் சமயமாக விளங்கிய ஜைன சமயத்திற்குப் பாண்டிய நாடும் சிறப்பாக மதுரை மூதூரும் தாயகமாக விளங்கின என்னும் உண்மையை நாம் முன்னரே ஆராய்ந்தறிந்தோம். பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரைமா நகரைச் சுற்றியுள்ள மலைகளில் ஜைன அறவோர்கள் வீற்றிருந்தனர் என்பதையும் கண்டோம்.

## சமணர் மலை

அறிவும் ஒழுக்கமும் மக்கள் பண்பிற்கு இன்றியமையாதவை. இவ்விரண்டையும் அடிப்படையாகக்கொண்ட நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மும்மணிகளாலாய ஆபரணங்களால் மக்களை அலங்கரிக்கும் அறிவு சான்ற அறவோர்கள் வதியும் மலைகளில் சமணர் மலையும் ஒன்று. சமணர்

என்ருல் **பகவான் விருஷபதேவர்** அருளிய துறவற நெறியை மேற்கொண்டோர் என்பதை முன்னரே அறிந்துள்ளோம். தொல்காப்பியமும் திருக்குறளும் கூறும் துறவற நெறியும் இஃதேயாகும். இத்தூய துறவிகளைப் பண்டைய தமிழ் நூல்கள் **கடவுளர்** என்றும் **தெய்வங்கள்** என்றும் போற்றுகின்றன. சிறப்பாகக் *"**கந்தன் பள்ளிக் கடவுளர்க்கெல்லாம்**" எனச் சிலப்பதிகாரத்திலும், "**காசறு துறவின் மிக்க கடவுளர்**" எனச் சீவக சிந்தாமணியிலும், "**கொல்லாத விரதத் தார்தம் கடவுளர் கூட்ட மொத்தார்**" எனக் கம்பராமாயணத்திலும் காணலாம். எனவே இத்தகைய அருந்தவத்தோர் பலர் அங்கு அறம் வளர்த்து வந்தமையால் இம்மலைக்குச் **சமணர் மலை** எனப் பெயர் வழங்கலாயிற்று. இவ் வறவோர்மலை மதுரைக்கு மேற்கே ஐந்து மைல் தூரத்தில் பெரிய குளம் போகும் பஸ் பாதையில் புதுக்கோட்டை என்னும் சிறிய கிராமத்தினருகே இருக்கிறது.

இம் மலை மிகப் பழங்காலத்திலிருந்தே ஜைன அறவோர்களின் உறைவிடமாக விளங்கி வந்துள்ளது. புதுக்கோட்டைச் **சித்தன்ன வாசல்** ஆகிய இடங்களில் உள்ளவை போலவே இங்கும் பிராமி எழுத்தாலாய கல்வெட்டுச் செய்திகள் பொறிக்கப் பெற்றிருப்பதால் இம் மலை கி. மு. இரண்டு அல்லது மூன்ரும் நூற்ருண்டுகளிலிருந்தே **சமணர்மலை** என்று பெயர் பெற்றிருக்க வேண்டுமெனக் கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணர்கள் கருதுகின்றனர். மேலும் ஜைனசமயம் தொன்றுதொட்டுத் தமிழர் சமயமாக விளங்கி வருவதால் இந் நாட்டு மன்னர்கள் இவ்வளவு பரந்த இடங்களையும், மலைகளையும், குகைகளையும், கோயில்

* நிக்கந்தன்

களையும், பள்ளிகளையும் அமைத்துப் பல்கலைச் செல்வர்களாக விளங்கிய ஜைன அறவோர்களுக்கு உரிமையாக்கி உள்ளனர். மேலும் சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களின் பரம்பரை வரலாற்றையும் அவர்கள் மேற்கொண்ட அறநெறியையும், கல்வெட்டுச் செய்திகளையும் ஆராய்ந்த அறிஞர்கள், நாம் கொண்ட கருத்தையே உறுதிப் படுத்துகின்றனர். எனவே பாண்டிய மன்னர்களின் வழி வழி வந்த பல அற நிலையங்களில் சமணர் மலையும் ஒன்றாகும்.

இம் மலையின் அமைப்பு, இதைச்சார்ந்த குன்றுகள், குகைகள், படுக்கைகள், சிலைகள், கல்வெட்டுச் செய்திகள் ஆகிய வரலாறுகளை எனது வேண்டுகோளுக்கு இணங்கி உதக மண்டலத்திலுள்ள இந்தியக் கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணர் (Government Epigraphist for India) உயர் திரு. 'B. C. H. **சாப்ரா**' அவர்கள் தமது துணைக் கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணர் திரு. M. வெங்கட்ராமையா M. A., M. Litt., அவர்களைக் கொண்டு எழுதி யனுப்பிய ஆங்கிலக் கட்டுரையின் மொழி பெயர்ப்பு :—

"மதுரைக்கு ஏறக்குறைய ஐந்து மைல் மேற்கில் ஒரு கூட்டமாக அமைந்துள்ள பாறைக் குன்றுகள் **சமணர்மலை** என அழைக்கப்படுகின்றன. இது கிழக்கு மேற்காகச் சுமார் இரண்டு மைல் உள்ளது. குன்றுகளின் தென்மேற்கு விளிம்பு கீழ்க்குயில்குடிக்கு நேர் முகமாக உள்ளது; வடமேற்கு ஓரம் மதுரை தாலுக்காவிலுள்ள வட பழனியின் ஒரு பகுதியின் முத்துப்பட்டி என்றும் ஆலம்பட்டி என்றும் வழங்கும் சிற்றூரின் அருகே இருக்கிறது. மிக அகன்ற பகுதியில் இத்தொடரின் அகலம் சுமார் இரண்டிலிருந்து மூன்று பர்லாங்

இருக்கலாம். இக் குன்றுகளுக்கு வழங்கப்படும் சமணர் மலை என்ற பெயர் குன்றுகளின் வெவ்வேறு பகுதியில் ஜைனச் சிலைகள் உள்ள காரணத்தினின்றும் பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் தமிழ் மொழியில் ஜைனர்கள், சமணரெனக் குறிப்பிடப்படுகின்றனர். (சிரமணு—வடமொழி) இக் குன்றுகள் அம்மணமலை என்றும் அழைக்கப்படுவது அம்மணர்மலை யென்னும் பேச்சு வழக்கின் உருமாற்றமே என்பது தெளிவு. (அம்மணர்—சமணர்—சிரமணு—வடமொழி)

இக் குன்றுகளில் வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் அடிச்சுவடுகளும், கல்வெட்டுகளும், விவரிப்பதன் அனுகூலத்திற்காக அ, ஆ, இ முதலியனவாக அழைக்கப் படலாம். கன்னடத்திலுள்ள ஒன்றைத் தவிர மற்ற எல்லாக் கல்வெட்டுகளும் தமிழ் மொழியில் உள்ளன.

**பகுதி அ—பஞ்சவர் படுக்கை:—** ஆலம்பட்டி அல்லது முத்துப்பட்டியின் மேற்கு மூலைக் குன்றுகளில் அமைந்த இது பஞ்சவர் படுக்கை எனப்படும். இப்பகுதியில் அநேக கற்படுக்கைகள் பாறையில் வெட்டப்பட்டிருப்பதனுல் 'பஞ்சவர் படுக்கை' எனச் சுற்றுப்புறங்களில் வழங்கப்படுகிறது. இவைகள் மேலேயிருந்து தொங்கும் ஒரு பாறையின் கீழ் அமைந்துள்ளன. மேலே இருக்கும் பாறையின் வெளியோரம் முழுவதும் ஒரு நீண்ட கோடு போன்ற வெட்டுத் துவாரம் அமைக்கப்பட்டு, நீர் பாறையினின்றும் ஒழுகிப் பாழியின் படுக்கைகளில் பரயாது தடுக்கப்பெற்றிருக்கிறது. இப் பாறையின் மீது இரு தமிழ்க் கல்வெட்டுகள் கிறிஸ்துவின் காலத்திய முந்நூறுண்டுகளுக்கு முன்னர்க் குறிப்பிடக்கூடிய பிராமி எழுத்துக்களில் செதுக்சப்

Pechippallam.

## தீர்த்தங்கரர் திருமேனிகள்

ஆதிபகவன்

CONNEMARA PUBLIC LIBRARY
1 - MAY 1955
MADRAS



உலைவிலாத் தவமுஞற்றி ஊழையும் உப்பக்கங்கண்டு உயர்ந்தோர்.
பற்றற்ற இத்திருமூர்த்திகளின் நிலையையே திருக்குறளாசிரியர்
“ மற்றுந் தொடர்பாலெ வண்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க்கு உடம்பும் மிகை ” என்றார்.

பெற்றிருக்கின்றன. பாழியினுள் படுக்கைகளின் அருகில் பீடத்தின் மீது பொருத்தப்பட்டு அமர்ந்திருக்கும் ஒரு ஜைனச் சிலை உள்ளது. சிலையினருகில் மற்றொரு பிராமி கல்வெட்டு செதுக்கப்பட்டுள்ளது. அது மிகவும் அழிந்து விட்டதால் அதன் வசனம் இங்கே கொடுக்கப்படவில்லை. மேலே தொங்கும் பாறையிலேயே இரண்டு மாடங்களும், அவற்றின் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு ஜைனச் சிலையும் உள்ளது. ஒவ்வொரு சிலையின் கீழும் கி. பி. பத்தாவது நூற்றூண்டினதாக இருக்கக்கூடிய வட்டெழுத்துக் கல்வெட்டுகள் (எண் 384) செதுக்கப்பட்டுள்ளன. இந்த 'அ' பகுதியில் வேறு கல்வெட்டுகளில்லை.

**பகுதி ஆ—செட்டி பொடவு**:—இது சமணர் மலைத்தொடரின் மேற்குச் சரிவுடன் தென்மேற்கு முனையில் உள்ளது. இது நேராகக் கீழ்க் குயில் குடியை நோக்கியுள்ளது. இதில் ஒரு குகை (புடைக்கு, பொடவு, உல்கோ என்பர்)யும் அதன் வாயிலின் சரிவான இடப் பாகத்தில் பாதையின் மேல் உட்கார்ந்திருக்கும் ஒரு பெரிய ஜைன உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இச் சிலையின் கீழ்ப்பட்டையில், சுமார் 10-வது நூற்றூண்டினது எனக்கூடிய வட்டெழுத்துக் கல்வெட்டுகள் (எண் 5) செதுக்கப்பட்டுள்ளன. குகையினுள், வளைந்த மேல் பகுதியில் உள்ள மாடங்களில் ஐந்து தொகுதிச் சிற்பங்களும் அவற்றில் மூன்று வட்டெழுத்துக் கல்வெட்டுகள் (எண். 6,788) நடுத் தொகுதியின் கீழே செதுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது சிற்பம் ஒரு வீராங்கனை சிங்கத்தின்மீது வலக்கையில் வளைத்த வில்லும், இடக்கையில் வேலும், மற்றிரண்டில் மற்றதோர் இரு போர்க்கருவிகளும்

ஏந்தியவளாய் அமைந்திருக்கும் தோற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. சிங்க வாகனத்தை நோக்கி ஒரு கையிலே வாளும் மற்றொன்றிலே கவசமும் ஏந்திய வீரனால் சவாரி செய்யப்படும் யானை உள்ளது. சாதாரணமாக இப் பெண் தெய்வங்களைப் போன்ற உருவங்கள் ஜைன சமயத்தில் அம்பிகை என்றேதான் குறிக்கப்படும். இதற்கடுத்துப் பீடத்தின் மீது அமர்த்தப்பட்ட மூன்று துறவிகளின் உருவச் சிலைகள் உள்ளன. அவற்றின் சிரமீது முக்குடையுள்ளது. ஐந்தாவதும், கடைசியுமான மாடத்தில் ஒரு பெண்ணுருவம் பீடத்தின்மீதமர்ந்து அதன் ஒரு கால் பீடத்தின் கீழ்த் தொங்குவது போலும், மற்றொன்று குறுக்காக மடித்து வைத்திருப்பது போலும் அமைக்கப்பட்டுள்ளன. அதன் வலது அருங்கையில் தாமரை மொட்டைப் போன்ற ஒரு பொருள் காணப்படுகிறது. ஜைனப் பெண் தெய்வங்களுள் பத்மாவதியே கையில் தாமரை மொட்டு பிடித்திருப்பது போல் வரையப்படுவதுண்டு. இப் பீடத்தில் மேற்கூறிய நான்கைத் தவிர வேறு கல்வெட்டுகளில்லை.

**பகுதி இ—பேச்சிப்பள்ளம்:**—இப் பகுதி சமணர் மலைக்குன்றுகளின் கிழக்குச் சரிவின் தெற்கு முனையில் குன்றுகளின் மேற்கேயுள்ள செட்டிபொடவின் அருகில் அமைந்துள்ளன. பேச்சிப்பள்ளம் என அழைக்கப்படும் இப் பகுதி குன்றுகளின் சிறிது மேல் பகுதியில் வரிசையாக ஜைனச் சிற்பங்களுடைய ஒரு பாறைக்கு எதிரேயுள்ள சமதரையில் உள்ளது. சிற்பங்களுள் ஐந்து, ஜைனத்தீர்த்தங்கரர் சுபார்சுவருடையன. இந்த ஜைனச் சிற்பங்களின் கீழே ஆறு வட்டெழுத்துக் கல்வெட்டுகள் (எண் 9, 10, 11, 12, 13,&14) உள்ளன.

CONNEMARA PUBLIC LIB
1 - MAY 1955
MADRAS



குகை வாயிலில் காணப்படும் மஹாவீரர் திருவுருவம்.



செட்டி பொடவு குகை. (Chettippodavu)

இச் சிற்பங்களை நோக்கியுள்ள மற்றொரு பாறையில் மற்றொரு கல்வெட்டு (எண் 15) வட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இவற்றில் சில கி. பி. 8-வது அல்லது 9-வது நூற்றாண்டினுடையதாகக் குறிப்பிடலாம். மற்றவை கி. பி. 9-வது அல்லது 10-வது நூற்றாண்டினதாக இருக்கலாம்.

**பகுதி ஈ**—மற்றும் "இ" பகுதியிலிருந்து மேலும் மலை மேலே செல்லும் பொழுது மற்றொரு பகுதி 'ஈ' ஐ அடையலாம். இங்கே கோயிலொன்றுள்ளது. அதன் தளம் மாத்திரமே தற்போது உள்ளது. தளத்தின் ஒரு வரிசையில் சுமார் கி. பி. பத்தாவது நூற்றாண்டினத்தாய் இருக்கக்கூடிய வட்டெழுத்தில் ஒரு முற்றுப் பெறாத கல்வெட்டுள்ளது.

**பகுதி உ**—குன்றின் மேல் உச்சியின் மிக அருகில் ஒரு கல் விளக்குக் கம்பம் உள்ளது. கம்பத்தின் பாகத்தில் சிறிது தூரத்தில் இப் பகுதியில் சமதரையாக இருக்கும் பாறையின் மேல் பகுதியில் மற்றொரு கல்வெட்டு (எண் 17) செதுக்கப்பட்டிருப்பது காணப்படுகிறது. இக்குறிப்பு ஒரு வரி கன்னடத்திலும் ஒரு வரி தமிழிலுமாக எழுதப்பட்டுள்ளன. எழுதப்பட்டவைகளில், கன்னட, தமிழ் எழுத்துக்கள் கி. பி. 11-வது அல்லது 12-வது நூற்றாண்டினவெனக் குறிப்பிடலாம்.

கல்வெட்டுகளின் (எண் 4–12) வசனம் இதன் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

## வட்டெழுத்துக்களால் பொறிக்கப்பெற்ற தமிழ் மொழிக்கல்வெட்டுச் செய்திகள் (Inscriptions)

### No. 1 & 2

சமணர் மலையின் மேற்குக் கோடியில் (முத்துப்

பட்டி (அ) (ஆலம்பட்டிக்கு அருகில்) பஞ்சவர்படுக்கையில் உள்ள பாறையில்:

Label A. வி ந தை ஊ ர

,, B. சை ய அளன்

,, C. கா வி ய

அப் பாறையிலேயே ஜெயின் சிலையின் கீழ்:

3

ஸ்வஸ்தி ஸ்ரீ வெண்புணாட்டுக் குறண்டி அஷ்ட உபவாசி படாரர் மாணாக்கர் **குணசேன தேவர்** மாணாக்கர் **களக வீரப் பெரியடிகள்** நாட்டாற்றுப் புறத்து அமிர்த பராக்கிரமந (ல்) லூரான குயிற்குடி ஊரார் பேரால் செய்வித்த திருமேனி. பள்ளிச் சிவிகையார் ரக்ஷை.

4

அதே பாறையில் மற்ஓருரு ஜெயின் சிலையின் அடியில்:

ஸ்வஸ்தி ஸ்ரீ (II*) பராந்தகபற்வதமாயின தென்(வ)ட்டைப் பெரும்பள்ளிக் குறண்டி அஷ்ட உபவாசி பட்டாரர் மாணாக்கர் **மாகணந்திப் பெரியார்** நாட்டாற்றுப்புறத்து நாட்டார் பேரால் செய்விச்ச திருமேனி. சி பள்ளிச் சிவிகையார் ரக்ஷை.

5

சமணர், மலையில் கீழ்க் குயில் குடிக்கு அருகில் செட்டிபொடவு குகைக்கு வெளியேஉள்ள ஜெயினச்சிலையின் கீழே பீடத்தில் செதுக்கப்பட்டுள்ளவை:

......ணாட்டுக் குறண்டித் திருக்காட்டாம் பள்ளிக் கனகநந்திப் (பட்டார)ர் அபிநந்தணபடாரர் அவர்

மாணுக்கர் அரிமண்டலப்படாரர் அபினந்தபடாரர் செய்வித்தத் திருமேனி.

6

ஷை பாறையில் ஜெயின் சிலையின்கீழே செட்டி பொடவு குகையின் வளைந்த கூரையில் செதுக்கப்பட்டுள்ளவை :

ஸ்வஸ்தி ஸ்ரீ (II*) வெண்புணாட்டுக் குறண்டித்திருக் காட்டாம் பள்ளிக் **குணசேன தேவர்** மாணுக்கர் **வர் தமானப்பண்டிதர்** மாணுக்கர் குணசேனப்பெரியடிகள் செய்வித்தத் திருமேனி.

7

அதேயிடத்தில் உள்ள மற்ருெரு ஜெயின் சிலையின் கீழ்ச் செதுக்கப்பட்டுள்ளவை:

ஸ்வஸ்தி ஸ்ரீ (II*) இப்பள்ளியுடைய குணசேனதேவர் சட்டன் **தெய்வ பலதேவன்** செய்விச்ச திருமேனி. (1*)

8

அதேயிடத்தில் மூன்ருவது ஜெயின் சிலையின் அடியில் உள்ளவை:

ஸ்வஸ்தி ஸ்ரீ (II*) இப் பள்ளி ஆள்கின்ற குணசேன தேவர் சட்ட(ன்) அந்தலையான் களக்குடி (த)ன்வை கை அந்தலையான்......(கை) யாலிவை(ய) ச்சார்த்தி செய்வித்த திருமேனி.

9

சமணர் மலையில், பேச்சிப்பள்ளத்தில் உள்ள குன்றில் இருக்கும் ஜெயின் சிலையின் கீழே யுள்ளவை :

ஸ்ரீ அச்சணந்தி தாயார் குணமதியார் செய்வித்த திருமேனி ஸ்ரீ (II*)

10

அதேயிடத்தில் மற்ருெரு ஜெயின் சிலையின் அடியில் காணப்படும் கல்வெட்டுச் செய்தியின் படம்.

CON... 1 - MAY 195 MADRAS



## இதன் வாசகம்

ஸ்வஸ்தி ஸ்ரீ .(II*) இப்பள்ளியுடைய குணசேன தேவர்சட்டன் அந்தலையான் மலைதன் மருமகன் **ஆச்சான் ஸ்ரீபாலனைச்** சார்த்தி செய்வித்த ஸ்ரீ திருமேனி.

## 11

அதேயிடத்தில் மூன்றுவது ஜெயின் சிலையின் அடியில் காணப்படும் கல்வெட்டுச் செய்தியின் படம்



ஸ்வஸ்தி ஸ்ரீ (II*) இப்பள்ளி உடைய குணசேன தேவர் சட்டன் சிங்கடைப் புறத்து **கண்டன்பொற்பட்டன்** செய்வித்த திருமேனி ஸ்ரீ (II*)

12

அதே யிடத்தில் நான்காவது ஜெயின் சிலையின் அடியில்

ஸ்ரீ II*ரு மிழலைக் கூற்றத்து பாரூரிடையன் **வேளான் சடைவனைச்** சார்த்தி இ(ன்)ன மாணவாட விட்டப் புணுட்டுநா(கூ)ர் ச(டை)யப்ப(ன்) செதவித்த தேவர் இடனத்து...தா...?.?...தாயார் (செய்) வித்த திருமேனி (II*)

13

அதே பாறையில் ஜெயின விக்கிரகங்கள் இருக்குமிடத்தில் உள்ளவை :

ஸ்ரீ (II*) வெண்பு நாட்டு திருக்குறண்டி **பாதமூலத்தான் அமித்தின்** ம(ரை)கள் கனகன (ந்*)தி செவிச்ச திருமேனி (II*)

14

அதே பாறையில் மேலேயுள்ளவற்றிற்கு அருகில் ஸ்வஸ்தி ஸ்ரீ (II*) இப் பள்ளி உடைய குணசேன தேவர் சட்டன் **அரையங்காவிதி சங்கணம்பியைச்** சார்த்திச்செய்விச்ச திருமேனி (II*)

15

அதே மலையில், பேச்சிப்பள்ளம் ஜெயின் சிலைகளின் வரிசைக்கு எதிர்த்த பாறையில் :

ஸ்வஸ்தி ஸ்ரீ (II*) இப்பள்ளி..............குணசேன தேவர் மாணுக்...........கர் **சந்திரப் பிரப**................ வித்த...............

16

இடிந்த கோயிலின், அடித்தள வரிசையில் அதே குன்றில் பேச்சிப் பள்ளத்திற்குமேலே :

இவ்வாண்டு இரட்டையான் ஸ்ரீபரம..............
ரிரஜைகூ (II*)

17

குன்றின் உச்சியில், கல்விளக்குக் கம்பத்தின் அரு
கில், பேச்சிப்பள்ளத்திற்கு மேல் (அதேகுன்று)

ஆரிய தேவரு ஆரிய தேவர் .மூல சங்க பெல குலா
பாலச்சந்திர தேவரு நேமி தேவருகு(ர்யா) பிரதா(ப(
அஜிதசேனதேவரு • கோவதானதேவரு..........ரமாடி
ச(ட) ரு (கன்னடம்)

என்னே **சமணர்மலை**யின் பெருமை! இம் மலையில் எட்டு நாட்களுக் கொருமுறை உணவருந்தும் நோன்புடைய **குணசேன தேவர்,** இவ் வறவோரின் மாணாக்கர்களாகவும் பக்தர்களாகவும் விளங்கிய **கனகவீரப் பெரியடிகள், மாகணந்திப் பெரியார், அபினந்தப் படாரர், வர்த்தமானப் பண்டிதர்,** ஆச்சார்ய நிலையை யடைந்து விளங்கும் **ஆச்சான் ஸ்ரீபாலர்,** பாண்டிய மன்னரால் காவிதிப் பட்டம் பெற்ற **அரையங்காவிதி சங்கநம்பி, அச்சணந்தி முனிவர்** போன்ற பல அறவோர்கள் அறம் வளர்த்துள்ளார்கள். இக்கடவுளர்களின் நினைவாகத் தீர்த்தங்கரரின் உருவச்சிலைகள் செதுக்கப்பெற்றுள்ளன. அச் சிலைகளைத் **திருமேனி, திருமேனி** எனப் பக்தியுடன் போற்றும் அன்பு நிலை நம்மையெல்லாம் இன்புறச் செய்கிறது. மேலும் புதுக்கோட்டைச் **சித்தன்ன வாசல்** எவ்வாறு தமிழகத்தின் **சித்தக்ஷேத்ரமாக** (மாமுனிகள் வீடுபேறடைந்த பேரிடம்) விளங்குகிறதோ அதுபோன்றே இத்திருமலைப் பகுதிகளும் **சித்தக்ஷேத்ரமாகக்** கருதுவதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. இவற்றை நோக்குகையில் செம்மை சான்ற இவ்வருந்தவத் தமிழ்ச் சான்

ரோர்களை ஓம்பிப் போற்றுதற்குரிய இல்லறத்தார்கள் இந்நாடெங்கும் நிறைந்திருக்க வேண்டுமென்பது நன்கு புலப்படும். தமிழ் நாடெங்கும் வாழ்ந்த ஜைனப் பெரு மக்களில் பெரும்பாலோர் பாண்டிய நாட்டில் வாழ்ந்து வந்தனர் என்பது உலகறிந்த உண்மை. இவ்வாறு இல்லறமும் துறவறமும் இணையற்று விளங்கிய பாண்டிய நாட்டின் பெருமையை விளக்கவும் வேண்டுமோ!

மாசற்ற துறவிகளின் தவப் பள்ளியாக விளங்கிய இத் தூய **சமணர் மலைக்கு** எதிர்பாராமல் நேர்ந்த ஆபத்தையும் அஃது நமது காங்கிரஸ் அரசினரால் அறவே நீங்கப் பெற்றுப் பாதுகாத்தற்குரிய பண்டைய புதை பொருளாக மதித்துப் போற்றும் பேற்றைப் பெற்ற வரலாற்றையும் சிறிது விளக்குவோம்.

ஜீவகாருண்ய சேவை சம்பந்தமான எனது சுற்றுப் பிரயாணத்தில் யான் கம்பம் என்னும் ஊருக்குப் போக நேர்ந்தது. 1949-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7-ஆம் தேதி மதுரையில் பஸ் ஏறிக் கம்பம் புறப்பட்டேன். அந்தப் பஸ் சுமார் 5 மைல் சென்றதும் அதில் ஏதோ பழுது ஏற்பட்டது. எனவே எல்லாப் பிரயாணிகளும் கீழே இறங்கி விட்டோம். மீண்டும் அது புறப்பட சுமார் 1 மணி நேரமாகிலும் பிடிக்குமெனத் தெரிந்தது. நான் எங்குச் சென்றாலும் மலைகளையோ, கோயில்களையோ, கண்டுவிட்டால் அவைகளைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வமிக்குடையவன். பஸ் நின்ற இடம் புதுக்கோட்டை என்னும் சிறிய கிராமம். அக் கிராமத்திற்குத் தெற்கே சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் கிழக்கு மேற்காக அமைந்துள்ள ஓர் அழகிய மலை தென்பட்டது. அதனைக்கண்ட நான் அங்கே இளநீர் விற்றுக்கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து, "அம்மலை

யின் பெயர் என்ன?'' வென்று கேட்டேன். அவர், அதற்கு 'அமணர் மலை' என்றார். மற்றொரு பெரியவர், "சமணர்மலை எனவும் அழைப்பதுண்டு" என்றார். அவ் விரண்டு பெயர்களாலும் அம் மலை, வரலாற்றுச் சம் பந்தமுடைய தென்பது இயல்பாகவே விளங்கிவிட்டது.

எனவே அத்திருமலையைக் காண வேண்டும் என என் மனம் விழைந்தது. கம்பம் போகும் பிரயா ணத்தை நிறுத்திக் கொண்டு ஓரன்பர் துணையுடன் சம ணர் மலைக்கு விரைந்து சென்றேன். அதன் கீழ்க் கோடி யின் அடிவாரத்தில் ஒரு பழங்காலக் குளமும் புதிதாக அமைக்கப் பெற்ற சிறு தேவதையின் கோயிலொன் றும் காணப்பட்டன. பின்னர் மலைமீது ஏறினேன்; சமமாக உள்ள ஓர் இடத்திற்கு வந்து சேர்ந்தேன். (20-ஆம் பக்கம் பார்க்க) அங்கு ஒரு சிறு ஆலமரம் இருக்கிறது. அதன் எதிரே உள்ள பாறையின் ஓரங் களில் கோரைப்புற்கள் செழிப்பாக வளர்ந்து அப் பாறையை மூடிக்கொண்டிருந்தன. இவ்வளவு விசால மான இடத்தில் ஒன்றையும் காணோமே என எண்ணி அப் பாறையின் மேலே சென்று பார்க்கலாமென அங் கொரு மூலையில் அக்கோரைப் புற்களைத் தள்ளிப் பார்த்தோம். அவ்வளவுதான்! அப்பாறையில் அழ காகச் செதுக்கப் பெற்ற தீர்த்தங்கரர் சிலை தென்பட் டது. உள்ளம் பூரித்தேன்! சமணர் மலை என்பதற்குரிய வரலாற்றையே கண்டுவிட்டோம் என ஆனந்தித்தேன். உடனே இருவருமாக எல்லாப் புற்களையும் மடித்துச் சாய்த்துப் பார்த்தோம்! அப்பப்பா! பிறவிக் கடலி னின்றும் ஆன்மாக்களைக் கரையேற்றுபவர்கள் என் னும் கருத்தைக் கொண்ட தீர்த்தங்கரர் சிலைகள் வரி சையாகக் காணப்பட்டன. **ஆதிபகவன், மகாவீரர்,**

**பாரிஸ்வ நாதர், நேமி நாதர். கோமடேசுவரர்** ஆகியோர் சிலைகளைக் கண்டோம். அச் சிலைகள் சாந்தமே குடி கொண்டு மக்களின் பண்பாட்டிற்கு வழிகாட்டும் சிலைகள். தூய்மையின் வடிவங்கள்; அஹிம்சையின் அடையாளங்கள் ; அன்பின் உருவங்கள். அருளறமே உயிர்பெற்றெழுந்தாற் போன்ற அச் சிலைகளைக் கண்டதும் என் எண்ணங்கள் எங்கெங்கோ சென்றுவிட்டன ! அறிவு விருந்தளித்த அறவோர்கள் வழிபாடியற்றிய அச்சிலைகள் இன்று பேசற்றுவாரின்றிப் புற்களால் மூடப் பெற்றுப் பாசி படர்ந்து கிடக்கின்றன ! நமது தாய்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பிற்கும், வளர்ச்சிக்கும் காரணமாயிருந்த அறவோர் உறைவிடம் இன்று காக்கையும், குருவியும் வதியும் இடமாகவே விளங்குகிறது. உலக மக்களனைவருக்கும் அறம் வகுத்த அறவாழி வேந்தர்களான தீர்த்தங்கரர்களின் சிலைகளைக் கண்டதும் என்னை அறியாமல் என் இருகரங்களும் தலைமேல் குவிந்து,

**“ அறிவன், அறவோன், அறிவு வரம் பிகந்தோன் ”**

எனச் சிலப்பதிகாரத்தில் சாரணர், கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி ஆகியோர் போற்றும் தோத்திரப் பாடலும் எனது உள்ளத்தெழுந்தது. கண்களில் ஆனந்த நீர் சுரந்தது ! சற்று நேரம் அவ் வுருவங்களைக் கண்டு உளமகிழ்ந்து மெய்மறந்து நின்றேன்.

இங்குள்ள விசாலமான பகுதியில் சுமார் 200 பேர் அமர்ந்து தியானிக்கலாம். இவ்வளவு அமைப்புகளுடன் விளங்கும் இச் சிலைகளின் முன்னின்று கிழக்கே உள்ள மதுரையை நோக்கினால் நமது பார்வை முழுவதும் நேரே மீனாட்சியம்மன் கோயில் மேற்குவாயில் கோபுரத்தின்மேல் விழுகிறது. அக்கோபுரத்தினின்றும் இம்

மலையை நோக்கினால் இச் சிலைகளை வணங்கக்கூடிய நிலையில் இவை வரிசையாக அமைந்துள்ளன. இதனால் இம் மலைக்கும், அக்கோயிற்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. [1]சிலைகள் உட்கார்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் மிக அழகாகச் செதுக்கப் பட்டுள்ளன. சிலைகளின் பக்கங்களிலும், அடிப்பாகங்களிலும் வட்டெழுத்தாலாகிய கல்வெட்டுச் செய்திகள் பொறிக்கப் பெற்றுள்ளன.

பின்னர் மலையுச்சிக்குச் சென்றேன். அங்கே ஒரு சிறிய கோயிலின் பாழடைந்த பாகங்கள் காணப்படுகின்றன. எனவே கீழே இறங்கி மலையின் தென் பகுதிகளில் கவனத்தைச் செலுத்தினேன். சிறிது தூரம் சென்றதும் ஒரு குகையும், அக்குகையின் வாயிற் புறத்துப் பாறையில் சுமார் நான்கு அல்லது ஐந்தடி உயரமுள்ள மகாவீரரின் சிலையும் காணப்படுகின்றன. அருகில்சென்றேன். அச்சிலையின் சிற்ப வேலையும், அதனுடைய புன்சிரிப்பின் தோற்றமும், உயிருள்ள ஒரு சான்றோரின் உருவம் போல் காட்சியளித்தது.

பின்னர், குகையில் நுழைந்தேன். அக்குகை ஒரே பாறையில் குடையப்பட்டது. மேற்பாகம் வட்டமாக விமானம் (Dome) போல் குடையப்பட்டிருக்கிறது. அதன் பாதி பாகம் உடைந்து கீழே விழுந்து விட்டபடியால் அக்குகையின் அமைப்பு குலைந்து பொலிவிழந்து கிடக்கிறது. அக்குகையின் மேல் காணும் வட்டமான பாகங்களைச் சுற்றிலும் தீர்த்தங்கரர்களின் திருவுருவங்களும் பரிவார தேவதைகளின் சிலைகளும் செதுக்கப் பெற்றுள்ளன. உடைந்து

1. அட்டவணைப் படம். 16 ஆம் பக்கம்.
2. 21 ஆம் பக்கம்.

விழுந்துள்ள பாகத்திலும், சிலைகள் இருந்திருக்க வேண்டும். அப் பாறையைப் புரட்டிப் பார்த்தாலன்றி அச்சிலைகளைக் காணவியலாது. அக்குகையின் பாறையில், H. K. Poln-1874 என்று கருப்பு வர்ணத்தால் எழுதப்பட்டுள்ளது. இதனால் H. K. Poln என்ற ஆங்கிலேய அறிஞர் 1874-இல் பார்வையிட்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

பின்னர், அம்மலை முழுவதும் சுற்றிப் பார்த்ததில் சில படுக்கைகளும், கல்வெட்டுக்களும் தவிர வேறு சிலைகள் எதுவும் காணப்படவில்லை. அம்மலைக்கு மேற்கே இரு பர்லாங் தூரத்தில் பெருமாள் கோயில் மலை எனத் தற்காலத்தில் வழங்கும் ஒரு மலையை அணுகினேன். அதன் தென் பாகத்தில் ஒரு திறந்த குகை தென்பட்டது. அக்குகையின் வாயிற்புறத்தின் மேல் பாகத்தில் இரண்டு தீர்த்தங்கரர்களின் சிலைகளும், கல்வெட்டுக்களும் செதுக்கப்பட்டு இருந்தன. அக்குகையில் சமண முனிவர்கள் தவமியற்றியதற் கறிகுறியாக வழவழப்பான படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. அப் படுக்கைகளின் பக்கத்தில் ஒரு ஜைன தீர்த்தங்கரரின் சிலை வைக்கப்பட்டுள்ளது. இது தவிர மற்றப் பகுதிகள் புதை பொருள் ஆராய்ச்சியாளர் எழுதியனுப்பியவாறு அமைந்திருக்கிறது.

எட்டு நாட்களுக்கொருமுறை உணவருந்தும், குணசேன தேவர் போன்ற மகாமுனிவர்கள் தவமியற்றியிருப்பதாலும், சமணர் மலை என்றே பெயர் வழங்கியிருப்பதாலும், இம்மலைப் பகுதிகள் கி. மு. நூற்றுண்டுகளிலிருந்தே பல முனிவர்களின் பள்ளியாக விளங்கியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மேலும் இப் புண்ணிய மலைப் பகுதிகளுக்குத் திருக்குறள் தந்த தேவ

ரும், சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கத் தேவரும், சூளாமணி ஆசிரியர் தோலா மொழித்தேவரும், நாலடியார் இயற்றிய சமண முனிவர்களும், திராவிடச் சங்கம் அமைத்த வச்சிர நந்தியடிகளும், மற்றும் பல அறிஞர்களும், கவிஞர்களும், அரசர்களும், சாவக சாவகிகளும், விஜயம் செய்திருக்கலாமோ என ஐயுறுதற்கு இடமுண்டாகிறது.

இவ்வளவு சீரும், சிறப்பும் பெற்று விளங்கும் வரலாற்றுப் பெருமலையின் பகுதிகள் சாலைக்குப்போடக் கிராவல் கற்களுக்காகச் சர்க்காரால் தூள், தூளாக உடைபடக் கண்டேன். அந்தோ! கைகால் அயர்ந்தன! ஒன்றும் தோன்றவில்லை! அங்கே உடைப்பது மலையா? கற்களா? இல்லை! இல்லை! பாரத நாட்டின் வரலாறுகளை - தமிழகத்தின் கலைச் செல்வங்களை, சமண அறவோர்கள் ஆற்றிய அருள் தொண்டுகளையல்லவோ உடைத்து அழிக்கிறார்கள்! இக் கோரக்காட்சியால் உள்ளம் உடைந்தேன்! ஏதோ என் சொந்தப் பொருளுக்கு ஏற்படும் நஷ்டம் போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது! பதைபதைத்து உயிரற்ற பிணம் போல் சென்னைக்குத் திரும்பினேன்.

சென்னை வந்ததும் நேரே தமிழ் நாட்டு ஜைனப் பெருமக்களின் தலைவரும், தலைசிறந்த தத்துவப் பேராசிரியருமான இராவ்பகதூர் A. சக்கரவர்த்தி நயினார் M. A., I. E. S. (Rtd.) அவர்களிடம் சமணர் மலைச் சிறப்பையும், அங்கு நடைபெறும் அழிவு வேலையைப் பற்றியும் கூறினேன். அவர் உடனே வியப்பும், துக்கமும் ஒருங்கே அடைந்தார். என்னை அழைத்துக் கொண்டு நேரே கோட்டையினுள் (Fort St. George) இந்தியா கவர்ன்மெண்டின் தென்னிந்திய புதைபொரு

ளாராய்ச்சி இலாகா சூபரிண்டெண்டெண்ட் உயர்திரு V. D. கிருஷ்ணசாமி அவர்களிடம் சென்றார். சூபரிண்டெண்டெண்ட் என்னையும் பேராசிரியர் அவர்களையும் அன்புடன் வரவேற்றார். பேராசிரியர் அவர்கள் சமணர் மலை சம்பவத்தை எடுத்துக் கூறினார். இலாகா அதிகாரி அவர்களும் இத்தகைய வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்படுவதைக் குறித்து வருத்தம் தெரிவித்தார். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டி என்னை உடனே ஓர் அறிக்கை எழுதித்தருமாறு பணித்தார். யான் சமணர் மலையைக் கண்டதையும், அது கிராவல் கற்களுக்காக உடைக்கப்படுவதையும் குறித்து விவரமாக எழுதித் தந்தேன். பேராசிரியர் அவர்களும் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு சூபரின்டெண்டெண்ட் அவர்களிடம் கூறினார். சூபரின்டெண்டெண்ட் அவர்களும் வரலாற்றுச் சின்னமாக விளங்கும் அம்மலையைப் பாதுகாக்க வேண்டியது தமது கடமையென்றும், அதனால் விரைவில் மதுரை கலெக்டர் அவர்களுக்கும் தமது தலைமைக் காரியலாயத்திற்கும் எழுதித் தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.

பின்னர் இந்திய சர்க்கார் கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணரான டாக்டர், B. Ch. சாப்ரா அவர்கள் சமணர் மலையைப் பார்வையிட்டதைப் பற்றி 'இந்து' (The Hindu) பத்திரிகை பிரதிநிதியிடம் பின்வருமாறு கூறியதாக 15-7-1949-ஆம் தேதியில் மேற்குறித்த பத்திரிகையில் காணப்பட்டது:

"மதுரைக்கு மேற்கே 7 மைல் தூரத்திலுள்ள சமணர் மலையில் பொறிக்கப் பெற்றுள்ள பத்தாவது நூற்றாண்டைச் சார்ந்த சில கல்வெட்டுக்கள் புதைபொருள் இலாக்காவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன

வென்றும், அங்குள்ள பாறைகள் உடைக்கப்படா வண்ணம் பாதுகாத்தற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றனவென்றும், மேற்கூறிய இடம் தொன் மையான சமணர்கள் குடியேறின இடம் என்றும், இதுபற்றிய வட்டெழுத்தாலான கல்வெட்டுக்களும் சின்னங்களும் உள்ளன'' என்றும் கூறினர்.

MADRAS, July, 14.

Recent discoveries of archaeological interest were explained by Dr. B. Ch. Chhabra, Government Epigraphist for India, in an interview with a representative of the Hindu to-day.

"Some jain inscriptions of about the 10th century A. D. in Samanar Malai, Seven miles from Madura, had also come to the notice of the department," he said, and added that steps were being taken to prevent the quarrying of the rocks there. The place he said, was an early jain settlement and there was jain bass reliefs with inscriptions in Vattezhuthu characters."

Hindu, 15—7—1949.

இச் செய்தியைப் படித்ததும், இழந்த பொருளை மீண்டும் பெற்றவனைப் போல் மகிழ்ச்சியில் ஆழ்ந்தேன். இனி அம்மலையின் சிற்பங்கள், கல்வெட்டுக்கள் பாது காக்கப்படும் என்பது நிச்சயம். எனவே அதன் காலத் தைப் பற்றி Dr. B. Ch. சாப்ரா அவர்கள் கூறும் கருத்துக்களைச் சிறிது ஆராய்வோம்.

அவர் கூற்றுப்படி அச்சிற்பங்கள் குகைகள் கி. பி. 10-ஆம் நூற்றாண்டாக இருக்கமுடியாது. கி. பி. 7-ஆம்

நூற்றாண்டின் முற்பகுதியாகவோ அல்லது அதற்கும் முந்தியதாகவோ இருக்கவேண்டும். ஏனெனில், கூன் பாண்டியன் காலத்தில் திருஞான சம்பந்தர் நடத்திய தாகக் கூறப்படும் மதப்போர் வரலாறு உண்மையாயின் Dr. சாப்ரா அவர்களின் கருத்து பொருந்தாது.

ஆயிரக் கணக்கான சமணப் பெருமக்களைக் கழுவி லேற்றிக் கொன்ற பின்னரும் ஒரு சமணர் அங்கு உயிரு டன் வாழ்வதும், அழகிய சிற்பங்களையும், குகைகளை யும் அமைத்துக் கொண்டு தவமியற்றுவதும் நடை முறையில் நடக்கக்கூடிய காரியமன்று. மேலும் வட் டெழுத்துக்களைப்பற்றி ஆராய்ந்து எழுதிய பல அறிஞர் கள் அவை கி. பி. 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதென அபிப்பிராயப் படுகின்றனர். எனவே அச் சிற்பங்கள் கி. பி. 2-ஆம் நூற்றாண்டாகவோ அல்லது கி. பி. 7ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாகவே இருக்க வேண்டும். Dr. B. Ch. சாப்ரா அவர்களின் கூற்றுப் படி இவைகள் கி. பி. 10-ஆம் நூற்றாண்டுடையதே என நிரூபித்துவிட்டால் பல ஆராய்ச்சியாளர்கள் கூறுவன போன்று திருஞான சம்பந்தர் கதை கி. பி. பத்தாம் நூற்றாண்டுடையதாக இருக்கலாம்.

மேலும் நாம் முன்னர் கூறியவாறு அதே ஏழாம் நூற்றாண்டில் நமது நாட்டிற்கு விஜயம் செய்த சீன யாத்ரீகர் தமிழ் நாட்டின் பல சிறப்புகளைப்பற்றி வரைந் துள்ள தமது யாத்திரைக் குறிப்பில் திருஞான சம்பந் தர் நிகழ்ச்சியைப் பற்றி ஒரு குறிப்பும் எழுதவில்லை. அதற்குப் பதிலாக ஜைன சமயமும் பௌத்த சமயமும் தென் நாட்டில் மிகச் செல்வாக்குப் பெற்று விளங்கி யுள்ளன வென்று எழுதியுள்ளார். ஜைன சமயம்

உண்மையில் வீழ்ச்சியடைந்த காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் இருக்கவேண்டும்.

ஏனெனில் கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் 15, 16-ஆம் நூற்றாண்டுவரை பல சமண அறிஞர் பெருமக்கள் அரும் பெரும் நூல்களை யாத்துள்ளனர். அது மட்டுமா! தலைசிறந்த உரைகள் எழுதிப் புகழ் பெற்ற பல சமண உரை ஆசிரியர்களின் எண்ணிக்கைக்குக் கணக்கில்லை. எனவே நாம் முன்னர் கண்டவாறு கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டதாகக் கூறப்படும் பிராமி கல்வெட்டைக்கொண்டு இவைகளும் அதனைத் தொடர்ந்து 5 அல்லது 6 நூற்றாண்டுடையதாக இருக்கவேண்டும். எக்காரணத்தாலும் அவை 10-ஆம் நூற்றாண்டு என்பது பொருந்தாது. அஃது எவ்வாறாயினும் அம்மலை மிகப் பழமை வாய்ந்த அறவோர் மலை என்பது நிச்சயம். இத்தகைய வரலாற்றுச் சின்னங்களைப் புகைப் படம் பிடிக்க வேண்டிச் சென்னை தங்கசாலை வீதியிலுள்ள ஜெயின் மிஷன் சங்கத்தினர் பொருளுதவியால் 9–11-'49 தேதி மதுரைக்குச் சென்று சமணர் மலையைச் சேர்ந்தேன்.

எதிர்பார்த்தவாறு கல் உடைப்பது நிற்கவில்லை. என் உள்ளம் பதைத்தது; ஒன்றும் தோன்றாமல் ஏதேதோ எண்ணிக் கலங்கினேன். 'சமணர் மலை' என்ற பெயரைக் கொண்டே அம் மலை சமண சமயத்தைச் சார்ந்தது என்பதை அறியாமல் அதனை உடைக்க முற்பட்டதே தவறு. அன்றியும் அம்மலை, வரலாற்றுப் பெருமைமிகப் பெற்றதென அறிந்தபின்னரும் சர்க்கார் உடைக்கத் துணிந்தது அதைவிடப் பெருந்தவறாகும்.

சைவர் மலை, வைணவர் மலை, முஸ்லிம் மலை, கிறிஸ்துவர் மலை என்ற பெயரால் அது அமைந்திருக்குமாயின்

அதனை உடைக்க அந்தந்தச் சமூகத்தினரின் அனுமதி யின்றி உளி நாட்ட முடியுமா? சமண சமயம் சிறு பகுதி யினர் சமூகம் என்ற காரணத்தினலன்றோ பண்டைய வரலாற்றைத் தாங்கி நிற்கும் பெருமலையைத் தூள் தூளாக உடைக்கின்றனர். அந்தோ! பிரிட்டிஷ் அரசாங்கம் இருக்கும்வரை அம்மலைக்கு ஆபத்தே இல்லை! நாடு குடியரசானதும் சமணர்மலை உடைக் கப்படுகிறது! கலைகளை வளர்க்கவேண்டிய குடியரசு, கலைகளை அழிக்க முற்பட்டதே என்று வருந்த லானேன். புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா அதிகாரியின் வேண்டுகோளும், இந்திய சர்க்காரின் தென்னிந்தியக் கல்வெட்டு ஆராய்ச்சி இலாக்கா நிபுணரான Dr. B. Ch. சாப்ரா அவர்களின் உறுதி மொழியும் எங்கோ பறந்தன! இவைகளையெல்லாம் மதியாமல் மலையை உடைப்பது வருந்தத்தக்க செய லாகும். நாம் அச்சிற்பங்களைப் புகைப்படம் எடுப்பது எவ்வளவு அவசியமும், அவசரமுமானது என்பதை இப்பயங்கர நிலை நிரூபித்துவிட்டது. எனவே புகைப் படம் எடுத்துக்கொண்டு மதுரைவந்து சேர்ந் தேன்.

மதுரை ஜோதி சன்மார்க்கச் சங்க வைத்திய சாலை மருத்துவர் உயர்திரு. முத்து அடிகளும், ஜோதி சன்மார்க்கச் சங்க காரியதரிசி உயர்திரு அ. கங்கணன் அவர்களும், பண்டைய வரலாற்றுத் துறையில் ஆராய்ச்சி நிறைந்த உயர் திரு ஏரல். அ. மலையப்பன் அவர்களும் இச் செய்தியை மதுரைப் பத்திரிகைகளில் வெளியிடின் நலமாயிருக்குமென ஆலோசனை கூறி னர். அவர்கள் மூவரும் எனது ஆப்த நண்பர்கள்; பொதுநலப் பிரியர்கள்; திருக்குறளின் வழி நின்றவர் கள். இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பாவின்

கருத்துப்படி மதவெறியற்றவர்கள். அந்நண்பர்களின் ஆலோசனையை ஏற்று மதுரையில் வெளியாகும் "தந்தி" "தினச் செய்தி" ஆகிய இரு பத்திரிகைகளுக்கும் சமணர் மலையின் சிறப்பைப் பற்றியும், அம்மலையைக் கிராவல் கற்களுக்காக உடைப்பதின் இழிவைக் குறித்தும் விளக்கி உடனடியாக அப் பயங்கரச் செயலை நிறுத்தவேண்டுமென்று வற்புறுத்தியும் சுருக்கமாக ஒரு அறிக்கையைத் தயார்செய்து அவர்களிடம் கொடுத்தேன். எனது அறிக்கையை அந் நண்பர்கள் அப் பத்திரிகைகளில் வெளியிட ஏற்பாடு செய்தனர். 'தந்தி'யிலும் 'தினச் செய்தி'யிலும் 14-11-49-ல் கொட்டை எழுத்துக்களால் தலைப்புக் கொடுத்து முக்கிய பக்கத்தில் அப்பத்திரிகைகளின் ஆசிரியர்கள் பிரசுரித்தனர். அவ் வாசிரியர்களுக்கும் மேலே கூறிய என் அன்புக்குரிய நண்பர்கள் மூவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சென்னை வந்ததும் 12-11-'49-இல் இந்திய சர்க்காரின் தென்னிந்தியப் புதைபொருள் ஆராய்ச்சி இலாகா சூபரின்டெண்டெண்ட் அவர்களுக்கு, 'சமணர் மலை' உடைப்பது நிறுத்தப்படவில்லை என்று அறிவித்தேன். அதற்கு அவர் மதுரை ஜில்லாக் கலெக்டருக்குக் கடிதம் எழுதுங்கள் என்றும் கூறினார். உடனே 17-11-'49 இல் மதுரை ஜில்லாக் கலெக்டருக்குக் கடிதம் எழுதினேன். இதன் மத்தியில் 'சமணர் மலை'யைப் பற்றிய முழு விவரங்களையும் கட்டுரையாக எழுதிச் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு அனுப்பினேன். அதன் ஆசிரியரும் 'மதுரையும், சமணர் மலையும்' என்ற தலைப்பின் கீழ் 10-12-'49-இல் படங்களுடன் பிரசுரித்துள்ளார்கள். மதுரைத் தியாகராய கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர். டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர்களும்

தமது முதற்படிவ நேஷனல் தமிழ் வாசகத்தில் சமணர் மலை குறித்துப் பாடமொன்று எழுதியுள்ளார்கள். ஆசிரியர் இருவர்க்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். பின்னர் 4-3-'50-ஆம் தேதி இந்திய சர்க்கார் தென்னிந்திய புதைபொருள் ஆராய்ச்சி இலாகா சூப்ரிண்டெண்டெண்ட் உயர்திரு. V. D. கிருஷ்ணசாமி அவர்களிடமிருந்து பின்வருமாறு கடிதம் வந்தது.

No. 40/926.

Superintendent,

Department of Archaeology, Madras - 9

Southern Circle, 4th March '50.

Fort St. George.

My Dear Sripal,

Your kind letter of the 3rd instant. You will be pleased to know that the Mathurai Samanar Malai is now a protected monument and the Collector is doing his very best to see that there are no prejudicial quarrying in the vicinity of the monuments.

With kind regards.

Yours sincerely,

(Sd.) V. D. Krishnasamy.

எதிர்பாராத இவ்வெற்றிச் செய்தி என்னை இன்ப வெள்ளத்தில் மிதக்கச் செய்தது. அளவு கடந்த ஆனந்தத்தால் மெய்ம்மறந்து நின்றேன். அக் கடிதத்தைப் பன்முறை படித்தேன். தேவலோகத்துப் பாரிசோவெனத் திகைத்தேன்! இறந்தவர் மீண்டும் உயிர்

பெற்றது போன்றும் உள்ளம் பூரித்தேன். இவ்வாறு சமணர் மலை பாதுகாக்கப்பெற்ற வெற்றிச் செய்தியில் களித்திருந்தபோது உதக மண்டலத்திலுள்ள கல்வெட்டு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து சமணர் மலைக் கல்வெட்டுச் செய்திகளின் முழு விவரங்களும் வந்துசேர்ந்தன. அவை களை ஆர்வத்தோடு படித்துப் பார்த்தேன். புன்முறுவல் பூத்தேன். உண்மையா, கனவா என வியந்தேன். மறு முறையும் நான் வியப்புக்கொண்ட 10-ஆம் நெம்பர் கல் வெட்டுச்செய்தியைப் படித்தேன். ஆம்! உண்மை தான்! ஆச்சான் ஸ்ரீபாலன் என்னும் பெயர் கொண்ட அற வோர் செய்தியே என அறிந்தேன்! என்னே விந்தை! எனது சுற்றுப் பிரயாண நிகழ்ச்சி—நான் சென்ற பஸ் அம்மலைப் பக்கமாகச் செல்வது—குறிப்பாக அம்மலைக் கருகில் சென்றதும் பஸ்ஸில் பழுது ஏற்பட்டு பஸ் நின்றுவிடுவது—அதனால் அம்மலையைக் காண நேர்ந் தது—அது பல நூற்றாண்டுகளாய் வரலாற்றுச் சின்னங் களைத் தாங்கி நிற்கும் சமணர் மலையென அறிவது— அதனைக் கிராவற் கற்களுக்காக உடைக்கும் கொடுமை யைக் கண்டு சகியாது வருந்துவது—கல் உடைப்பதை நிறுத்தவேண்டித் தக்க நடைவடிக்கை எடுத்து வெற்றி கண்டது—அத்திருமலையின் கல்வெட்டுச் செய்திகளில் ஆச்சான் ஸ்ரீபாலன் என்னும் பெயராலேயே ஓர் அற வோர், அறம் வளர்த்த செய்தி காணப்படுவது-யானும் ஸ்ரீகம்பீர விஜய ஸ்ரீமுனிவர் எனும் ஜைனத் துறவோர் ஆசிபெற்று அறத்தொண்டு புரிவது ஆகிய சம்பவங் களைச் சிந்தித்துப் பார்க்கையில் இவை எனது முற் பிறப்பின் தொடர்புதானோ வெனப் பலரும் ஐயுறும் வண்ணம் அமைந்திருக்கிறது. எனது கூற்றைத் தற்பெருமையெனக் கருதாது வாசகர்கள் மன்னிக்க வேண்டுகிறேன். ஏனெனில்,

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்(கு),**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**

எனத் திருக்குறள் திருவாய் மொழியையும் நமது இந்திய இலக்கியங்களில் காணப்பெறும் பல பெரியோர்களின் முற்பிறப்புச் சம்பவங்களையும், ஆழ்ந்தறிந்த எவரும் இவ்வாறு எண்ணுவது இயல்பு. மேலும் அறமே உருவாய் அமைந்த இம்மாண்புறு மலையைக் கண்டு வணங்கிப் பாதுகாக்கும் பாக்கியம் பெற்ற பின்னரே எனது வாழ்க்கையில் கலந்த ஜீவகாருண்ய சேவைக்கும் வழி பிறந்தது. சென்னை சட்டசபையில் பலி விலக்கு மசோதாவைச் சட்ட மியற்றவேண்டி அடியேன் எடுத்துக்கொண்ட முயற்சியும், சமணர் மலை வெற்றி கொண்ட 1950-ஆம் ஆண்டிலேயே செப்டம்பர் மாதம் 14-ஆம் தேதி அறிவு சான்ற கனம் மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்களின் பேராதரவில் சட்ட மாக்கப்பட்டது. அச்சட்டம் 1951-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதி முதல் அமுலுக்கும் வந்துவிட்டது. இவ் வெற்றி அஹிம்சையின் வெற்றி! அன்பின் ஆக்கம்! அருளறத்தின் மறுமலர்ச்சி! சமணர் மலை அறவோர்களின் தவப்பெருமை! எனவே நாம் அனைவரும் சமணர் மலைசென்று பகவான் விருஷப தேவர், நேமிநாதர், பாரீஸ்வநாதர்; மகா வீரர் முதலிய தீர்த்தங்கரர்களை வழிபடுவோம். பகவான் விருஷப தேவர் (ஆதிபகவன்) இவ்வுலகிற்கு முதல் முதல் அறம் வகுத்தவர் என்பதையும், அவர்தம் திருவறமே முதல் நூலாகப் பரத கண்டத்திலும், சிறப்பாகத் தமிழகத்திலும் தொன்று தொட்டு வழங்கி வருகிறது என்பதையும் முன்னேரே அறிந்துள்ளோம்.

இவ்வறிவனைப் போற்றாத இந்திய இலக்கியங்களே இல்லை என்னலாம். திருக்குறளாசிரியர் ஆதிபகவன் எனப் போற்றியுள்ளதும் இவ் வறிவனையே யாகும். தொல்காப்பியத்தில் காணப்படும் **கந்தழி** எனும் கடவுளும் இவரே. கந்தழி என்பது பற்றற்றவர் எனப் பொருள்படும். **நிக்கந்தம்** எனும் பிராகிருத மொழியின் மொழிபெயர்ப்பே கந்தழி என்பது. சிலப் பதிகாரத்தில் நிக்கந்தக் கோட்டம் என வருவதாலும் அறிக. எனவே பரதகண்ட முழுமையும் பகவான் விருஷப தேவரை முதற் கடவுளாகவும், முதற்றலை வராகவும், முதல் ஆசிரியராகவும் போற்றி வந்துள் ளனர். நமது இந்திய நாட்டின் உதவி ஜனாதிபதியாய் விளங்கும் தத்துவப் பேராசிரியர் டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்கள் தாம் எழுதிய ' இந்திய தத்துவங் கள் ' என்னும் நூலில் பகவான் விருஷபதேவர், ரிக்வே தம், பாகவதம் போன்ற வைதிக நூல்களில் போற்றப் பட்டுள்ளாரென்றும், கி. மு. முதல் நூற்றாண்டில் பகவான் விருஷப தேவரை மக்களனைவரும் வழிபட்டு வந்தனர் என்பதற்குரிய ஆதாரங்கள் நிறைய இருக் கின்றன வென்றும் எழுதியுள்ளார். இவ்வறிஞரின் வரலாற்றுரையால் கி. மு. முதல் நூற்றாண்டில் பல் வேறு மதங்கள் ஏற்பட்டு மக்கள் வெவ்வேறு தெய் வங்களை வழிபட்டு வந்தாலும் பகவான் விருஷப தேவரை அனைவரும் மதவேறுபாடின்றி அறத் தின் சின்னமாய்ப் போற்றி வந்தனர் என்பது நன்கு விளங்குகிறது. ஏதோ இடைக்காலத்தில் ஏற்பட்ட சமயப் பூசல்களால் மக்களுக்குள் பிளவுகள் ஏற்பட்டு உட்பகை வளர்ந்துவிட்டது. சகோதர உணர்ச்சி சாம்பிப் போயிற்று. அன்பின் வழியதாயுள்ள உயிர் நிலை வன்பகைக் கிடனா யமைந்து விட்டது! நடு

நிலைமை நாசமடைந்து வஞ்சனையும் பொறாமையும் வளம்பெற்று விட்டது.

இந்நிலை மக்கள் சமுதாயத்திற்கும் பண்பாட்டிற்கும் அழிவைத் தேடுவதாகும். மதமோ சமயமோ நாம் பிறக்கும்போது நம்முடன் கூடிப் பிறந்தவை யல்ல. நமது தாய்தந்தையர் மேற்கொண்டுள்ள கொள்கைகளைப் பின்பற்றி வருகிறோமே யன்றி வேறில்லை. அறிவின் திறத்தால் ஆராய்ச்சியின் முடிவால் அனுபவத்தின் இயல்பால் நாம் நமது அறிவிற்கும் மக்கள் நல மேம்பாட்டிற்கும் ஒழுக்கத்திற்கும் சிறந்த வழியாகவுள்ள கொள்கைகளைத் தழுவிக் கொள்ளலாம். எனவே மதமும் சமயமும் நம்மைக் கட்டுப் படுத்துபவை யல்ல வென்பதையும் நன்கு உணரவேண்டும்.

**“ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு ”**

என்பது தமிழ் மறையன்றோ? நமது நாட்டு மதப் பூசல்களின் வரலாற்றைப் படித்தால் நாம் எத்தனை மதங்களைத் தழுவியும் வழுவியும் வந்துள்ளோமென் பதும் தெரியும். எனவே நாம் எம்மதத்தைச் சார்ந்தவ ராயினும் பண்டைய காலம் போலவே உலக முதல் தலைவராகவும், உலக முதல் ஆசிரியராகவும், உலக முதல் உபதேசகராகவும், உலக முதல் முனிவராகவும், உலக முதல் சித்தராகவும் (வீடுபேறு பெற்றவர்) விளங்கும் **ஆதிபகவனை** (பகவான் விருஷப தேவர்) வழிபடச் **சமணர்மலை செல்வோம்!** சைவ சமயத்தவராயினும், வைணவ சமயத்தவராயினும், புத்தமதத்தின ராயினும், சீக்கியராயினும், கிறிஸ்துவரா யினும், இஸ்லாமியராயினும் வேறு எக்கொள்கைகளையுடையவராயினும் அனைவரும் அப்பெருமகனை வழிபடலாம். அவ்வாறு அனைவ

ருக்கும் அவ்வறிவன் முதற்றலைவராய் விளங்குவதனுற் ருன் அவ்வறவோனின் உருவச் சிலைகளைத் திறந்த வெளிகளில் மலைகளிலும் குன்றுகளிலும், பாறைகளி லும் மற்றும் பல வெளியிடங்களிலும் அமைத்துள்ள னர். ஆதி பகவன் திருவறம் மன்னுயிர் அனைத் திற்கும் அரண்செய்வ தர்கையால் மக்களேயன்றி விலங்கினங்களும் அவ்வறவாழி வேந்தனை வழிபட்டு அறங்கேட்டன வென்பதைத் திருக்கலம்பக ஆசிரியர்,

**"அடல்விடங் கொள் பாதபூங்கள் அமிர்தீனுங் காலம்**
**அரியுடுைடு கரியுமிருந்(து) அறங்கேட்குங் காலம்**
**குடரிடங்கொள் பசியிஞெடு பிணிநணுகாக் காலம்**
**குறைந்தபொறி நிறைந்தெவருங் குணம்புரியுங் காலம்**
**கடல்கிளர்ந்த தெனவுலகுத் தொடர்ந் திறைஞ்சி ஏத்தக்**
**கீடிக்கமல மடிக்கமல மேந்தத் தொல்லை**
**இடர்கடந்த கருணைமுகில் விசும்பிலெழுங் காலம்**
**எம்மனமும் காமனம்புக் கிடூருழலாக் காலம்"**

என்ருர். சீவக சிந்தாமணியில் பகவான் அறங்கூறும் சமவசரணம் எனும் பேரவையை வருணிக்கையில்,

**"பிண்டியின் கொழுநிழல் பிறவி நோய்கெட**
**விண்டவர் கணைகதிர் வீரன் தோன்றினுன்**
**உண்டிவண் 'அறவமிர்தம்' உண்மி னேவெனக்**
**கொண்டன கோடணை கொற்ற முற்றமே"**

என்ருர். இங்கேயும் மக்களனைவரும் சாதிமத வேறு பாடின்றி 'அறவமிர்தம் உண்ண வாரீர், அறவமிர்தம் உண்ணவாரீர்' என ஆரவாரத்துடன் கூடி அறங் கேட் கச் சென்றனர் எனக் கூறப்பட்டுள்ளது.

ஜைன அறவோர் மக்கள் பண்பாட்டைச் செம் மைப்படுத்தி உலகில் சமாதானத்தையும் சகோதர

உணர்ச்சியையும் நிலவச் செய்யவேண்டுமென்பதையே குறிக்கோளாகக் கொண்டவர்களாகையால் எங்கும் அருளறத்தையே வற்புறுத்தியுள்ளார்கள். இலக்கியங்களில் மட்டுமின்றி மலைகளிலும் பாறைகளிலும் கூட **"அறம் மறவற்க" "அறமல்லது துணையில்லை"** எனப் பொறித்து வைத்துள்ளார்கள். சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் தமது இணையற்ற இலக்கியத்தின் முடிவுரையில்,

**"எங்குள அறத்திேனாரும் இனிதூழி வாழ்க"**

என வாழ்த்தும் வாழ்த்துரை நமது உள்ளத்தே நின்று ஊஞ்சலாடிக் களிக்கின்றது. எந்நாட்டவராயினும், எம்மதத்தினராயினும், அறத்தின் வழி நிற்றல்வேண்டுமென்பதே தேவர்தம் திருவுள்ளம்.

## அறவுரைகள்

**அறிவெனப் படுவது துன்பந் துடைத்தல்**
**செறிவெனப் படுவது மும்மையுஞ் செறிதல்**
**ஆண்மை யெனப்படுவ தைம்புலன் வென்றல்**
**கேண்மை யெனப்படுவது கேட்டிடத் துதவல்**
**அருமை யெனப்படுவ தறநெறி வழுவாமை**
**பெருமை யெனப்படுவது பிறனில் விழையாமை**
**அறமெனப் படுவதாருயி ரோம்பல்**
**உறவெனப் படுவ துற்றுழி நிற்றல்**
**வாய்மை யெனப்படுவது வருந்தா துரைத்தல்**
**தூய்மை யெனப்படுவ துள்ளந் தூய்மை**
**இன்பமெனப் படுவது ஈறி லின்பம்**
**அன்பெனப் படுவ தார்வ முடைமை**
**தவமெனப் படுவ தைம்புலம் வெறுத்தல்**
**வதமெனப்படுவது கொல்லா விரதம்.—ஜீவஸம் போதனை.**

"விரையார் மலர்மிசை வருவார் திருவறம் விழைவார்
கொலேயினை விழையார்பொய்
யுரையார் களவினை யொழுகார் பிறர்மனை யுவவார்
மிகுபொருள் உவவார்வெஞ்
சுரையால் உணர்வினை யழியார் அழிதசை துவ்வார்
விடமென வெவ்வாறும்
புரையார் நறவினை நுகரார் இரவுணல் புகழார்
குரவரை இகழாரே"

—திருக்கலம்பகம்.

*அறிஞர் பெருமக்களே!*

*இத் திருவறங்கள் இல்லறத்தாருக்கென ஆதிபகவனால் அருளப்பெற்றவை. உலகில் சகோதர உணர்ச்சி பரவ, சமரசம் விளங்க, அன்பும் அறனும் வளர, சமாதானம் நிலவ, பொருளாதார சமத்துவமோங்க, உலகமூடம், தேவமூடம், பாசண்டி மூடம் ஆகிய மும்மூடங்களும் அகன்று மக்களிடையே நல்லறிவும் நல்லொழுக்கமும் நிலைபெற மேற்கண்ட பேரறங்களே துணைசெய்யும். எனவே இந் நல்லறங்களைத் திருவாய் மலர்ந்தருளிய* **ஆதிபகவன்** *(பகவான் விருஷபதேவர்) அருங்குணங்களைத் திருக்குறளாசிரியர் போற்றும் குறட்பாக்களைக் கொண்டு நாமும் மனமொழி மெய்களால் சமணர்மலை அறவாழி வேந்தனை வாழ்த்தி வணங்குவோம்.*

1. அகர முதல எழுத்தெல்லாம் ; ஆதி
பகவன் முதற்றே உலகு.
2. கற்றதனால் ஆய பயன்என்கொல் ? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.
3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையும் சேரா ; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

8. அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறஆழி நீந்தல் அரிது.

9. கோளில்பொறியில் குணம்இலவே ; எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் ; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

''மன்னியபே ருலகனைத்தும்
நின்னுள்ளே நீயொடுக்கினை
நின்னின்று நீவிரித்தனை
நின்னருளின் நீகாத்தனை

என வாங்கு,

ஆதி பகவனை யருகனை
மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே''

— திருக்கலம்பகம்.

''ஆதிபகவன் அசோக வசலன்
சேதிப முதல்வன் சினவரன் தியம்பகன்''

— திருப்பாமாலை.

''அத்தனே என்னை ஆளீர் சரணம்
ஆதி பகவன் அருளே சரணம்''

—தோத்திரத்திரட்டு

1. வெள்ள மாரி தரித்தோய்நீ
   வினையின் வாயில் அடைத்தோய்நீ
உள்ள மாட்சி யுடையோய்நீ
   யுயப்போம் வண்ணம் உரைத்தோய்நீ
நள்ளென் யாமத்து யான்செய்த
   நவைக ளெல்லாம் நனிகண்டும்
எள்ளலில்லாப் பெரியோய்நின்
   இணையில் பாதம் அணைவல்யான்.

2. மூட மூன்றும் உரைத்தோய்நீ
   முரண்செய் தோற்றம் முனிந்தோய்நீ
வீடும் கட்டும் விரித்தோய்நீ
   வினையின் இன்பம் வெறுத்தோய்நீ
காடு கிளர்ந்து காட்டியான்
   கலக்க வொன்றுங் கலங்காத
பாடற் கரிய பெரியோய்நின்
   பழிப்பில் பாதம் பணிவல்யான்.

3. அல்லல் பிறவி அகன்றோய்நீ
   ஆசை வெவ்வேர் அறுத்தோய்நீ
வெல்லற் கரிய வனங்கனைமெய்
   வெண்ணீ றாக வெகுண்டோய்நீ
கொல்லக் கருதி வந்தோனைக்
   குணங்க ளாலே வணங்குவித்த
சொல்லற் கரிய பெரியோய்நின்
   தோமில் பாதம் தொழுவல் யான்.

(வேறு)

4. அரிய வாயின செய்திட்(டு)
   அமரர் துந்துபி யறைந்து

புரிய பூமழை பொழியப்
பொன்னெயில் மண்டிலம் புதைந்த
விரிகொள் தண்டளிர்ப் பிண்டி
மரநிழ லிருந்திரு வினையும்
பிரியும் பெற்றியை யுரைத்தாய்
பெரியவர் பெரியவர் பெரியாய்.

5. கண்ணினா லொன்றுங் காணாய்
காணவும் உளபொரு ளொருங்கே
பெண்ணு மல்லவுஞ் சாராய்
பிரிதலில் பேரின்ப முடையை
உண்ணல் யாவதும் இலையாய்
ஒளிதிகழ் உருவமஃ துனதால்
எண்ணில் யார்நினை யுணர்வார்
இறைவர்தம் மிறைவர்க்கும் இறைவா.

6. அன்மை யாரவர் தாந்தாம்
அறிந்தன வுரைத்தபொய் யாக்கி
நின்மெ யாகிய ஞான
நிகழ்ச்சி நீவிரித் துரைத்த
சொன்மை யாரிடை தெரிந்தார்
தொடர்வினை முழுவதும் சுடுநின்
தன்மை யார்பிற ரறிவார்
தலைவர்தந் தலைவர்க்குந் தலைவா.

— நீலகேசி

திருவறம் வளர்க!

## உலகத்து முதல் ஆசிரியரும் அறவோருமாகிய பகவான் விருஷபதேவரைப் போற்றும் பண்டைய இலக்கியங்கள்

---

(1) *மருத்வம் த விருஷபம் வா்விருதான மகவாரி*
*திய்யசாசன மிந்திர*
*விச்வா ஸாஹம வசே நூதனுயோக்ரா*
*ஸூதோதாமிஹந்தா ஹ்வயேம* : I

(ருக்வேதம்)

(2) *ஓம் நமோ அர்ஹதோ விருஷபோ.*
*ஓம் விருஷப : பவித்ரம்,*
*புருஹூதமத்வரம் யக்ஞேசுநக்நம்*
*பரமம் மாஹ ஸம்ஸ்துதம்*
*வரம் சத்ரும் ஜயதம் பசுரிந்திர*
*மாஹுரிதி ஸ்வாஹா*

(யஜுர்வேதம்)

(3) *கைலாஸே பர்வதே ரம்யே,*
*விருஷரூபாயம் ஜிநேஸ்வர* : I
*சகார ஸ்வாவதாரம் ய:, ஸர்வக்ஞ: ஸர்வக: சிவ* : II

(சிவபுராணம்)

(4) *நாபிஸ்து ஜனயேத்புத்ரம்,*
*மருதேவ்யா மனோஹரம்* I
*விருஷபம் க்ஷத்ரியம் ஸ்ரேஷ்டம்,*
*ஸர்வ க்ஷத்ரிய ஸ்ய பூர்வஜம்* II
*விருஷபாத் பரதோ ஜக்ஞே,*
*வீரபுத்ர : சதாக்ரஜ* : I
*ராஜ்யே பிஷிச்ய. பரத,*
*மஹாப்ராவ்ராஜ்ய மாஸ்தித* II

இஹ ஹி இக்ஷ்வாகுகுலவம்
சோத்பவேன நாபிசுதேன
மருதேவ்யா நந்தன மஹாதேவேன
விருஷபேண தசப்ராகாரோ தர்ம:
ஸ்வய மேவாசீர்ண கேவலஞான
லாபாச்ய பிரவர்த்தித : 1

(பிரம்மாண்ட புராணம்)

(5) அஷ்ட ஷஷ்டிஸு தீர்த்தேசு,
யாத்ராயாம் யத்பலம் பவேத்
ஆதிநாதஸ்ய தேவஸ்ய, ஸ்மரணேனாபி தத்பவேத்

(நாக புராணம்)

(6) விருஷபோ மருதேவ்யாச,
விருஷபாத் பரதோ பவத் 1
பரதாத் பாரதம் வர்ஷம்,
பரதாத் ஸுமதிஸ்த்வபூத் 1

(அக்னி புராணம்)

(7) ஓம் த்ரைலோக்யப்ரதிஷ்டிதான்,
சதுர்விம் ஷதிதீர்த்தங்கரான்
விருஷபாத்யாவர்த்தமானாந்தான்,
சித்தான் சரணம் பிரபத்யே

(பிருகதாரண்யம்)

(8) பாகவத புராணம் ஐந்தாவது ஸ்கந்தத்தில் **பகவான் விருஷப தேவரை** மகா விஷ்ணுவின் அவதார புருஷராகப் போற்றப்பெற்றுள்ளது.

## மதுரை ஜில்லா உத்தமபாளையத்து மலையில் உள்ள தீர்த்தங்கரர் உருவச்சிலைகள்



1

CONNEMARA PUBLIC LIBRARY
1 - MAY 1955
MADRAS



2

- MAY 1955
MADRAS
...ARY

## உத்தமபாளையம்



3



4.

உத்தமபாளையத்து மலையில் விளங்கும் ஜைனச் சின்னங்களின் விவரங்களையும் இந் நான்கு படங்களையும் அன்புடன் அனுப்பியுதவிய உத்தமபாளையத்து பிரமுகர் ஜனுப் **கா. சி. முகம்மத் இஸ்மாயில்** அவர்களுக்கு எனது நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

CONNEMARA PUBLIC LIBRARY

# SAMANARMALAI INSCRIPTIONS

*Edited by:*

Sri. M. Venkataramayya, Epigraphical Assistant,
Ootacamund.

---

Samanarmalai is the name given to a group of rocky hills situated about five miles west of Madura. They stretch in an east-westerly direction for a distance of about two miles. The south-western extremity of the hills directly faces the village of Kilkuyilkudi while the north-western extremity lies near the hamlet of Muttuppatti also known as Alampatti which is a part of the village called Vadapalanji in the Madura Taluq. The width or depth of the range at its widest stretch would roughly be about two to three furlongs. The name "Samanarmalai" by which these hills are known must have been derived from the fact that they contain scattered at different spots on the hills a large number of Jaina images; for, in the Tamil language the Jains are termed **Samanar.** (**Sramana**. Sanskrit.) The hills are also known by another name. Ammanamalai, which is evidently a colloquial form of Amanarmalai. (Amanar—Samanar—Sramana—Sanskrit).

The Jaina vestiges and inscriptions on these hills are found at different spots which, for the sake of convenience of description, may be called A, B, C, etc. All the inscriptions except one are in the Tamil language. This one is in Kannada.

**Spot A : Panchavarpadukkai:**—This lies on the western tip of the hill near Alampatti or Muttuppatti and it is locally known as **Panchavarpadukkai**, i.e., the beds of the **panchavar**, in virtue of the fact that this spot contains a number of stone beds (**padukkai**) hewn on the rock. The beds lie under an overhanging boulder which has a dripline cut all along its outer extremity to prevent water from oozing down the boulder and flowing into the beds of the cavern. On this boulder are carved two Tamil inscriptions (Nos. I and II) in Brahmi characters assignable to the early centuries of the Christian era. In the cavern, close to the beds, is a seated Jaina image fixed on a pedestal. Near the image is engraved another Brahmi inscription which is highly damaged. Its text is not, therefore, furnished here. On the overhanging boulder itself are carved two niches, each of which contains a Jaina image. Two inscriptions (III and IV) in Vattezuthu characters of about the tenth century A.D. are engraved, one below each of

the images, on this boulder. This spot A contains, no other inscriptions.

**Spot B : Settippodavu** :—This spot lies at the south-western tip of the Samanarmalai range along its western slope. The spot directly faces the village of Kilkuyilkudi. It consists of a natural cave (**podavu, vulgo** for **pudai**) and is locally called **Settippodavu**, evidently on account of the fact that at the entrance to the cavern, on its proper left, is carved on the rock a huge seated Jaina figure. On the lower belt of the pedestal of this image is engraved a Vattezuthu inscription (No. V) in characters of about the tenth century A. D. within the cave, on the arched roof are cut in niches five groups of sculptures with three Vattezuthu inscriptions (Nos. VI, VII and VIII) engraved below the central group. The first of the sculptures represents a female warrior sitting on a lion with a drawn bow in the right hand and an arrow in her left. In two of her other hands she holds some weapons. Facing the lion vehicle is an elephant ridden by a male figure who holds a sword in one hand and a shield in the other. The whole panel may be taken to represent the Jaina goddess, Ambika, who is usually pictured in this wise. Next to this are three figures of Jaina ascestics seated on pedestals. They bear triple umbrellas over-

head. In the fifth and last niche is carved a female figure seated on a pedestal with her right leg hanging down the pedestal and the other folded cross-wise on the seat. In the palm of her right hand she holds an object which looks like a lotus bud. Among the Jaina goddesses, Padmavati is usually pictured as holding a lotus bud. No other inscriptions besides the above four are found in this place.

**Spot C : Pechchippallam** :—This spot lies on the eastern slopes of the Samanarmalai hills at their southern extremity, close to **Settippodavu** which lies on the western side of the hills. The spot called **Pechchippallam** is situated slightly higher up the hill, on a level ground in front of a rock which bears a row of Jaina sculptures. Five of them are of the Jaina Tirthankara Suparsva. Below these Jaina sculptures are six Vattezuthu inscriptions (Nos. IX, X, XI, XII, XIII, XIV). On another rock facing these sculptures, is engraved another inscription (No. XV) also in Vattezuthu characters. The script of some of these may be assigned to the 8—9th century A.D. while that of the rest may be placed in the 9—10th century A.D.

**Spot D :** Proceeding higher up the hill from **Spot C** another **Spot D** is reached where

there are ruins of a temple, the basement of which alone remains intact. On one of the tiers of the basement is engraved an incomplete inscription (No. XVI) in Vattezuthu characters of about the tenth century A.D.

**Spot E**: Further up the hill, very near the top, stands a stone lamp post. At the foot of the post, but a little away from it, another inscription (No. XVII) is found engraved on the surface of the rock which at this spot is level. The record is written in Kannada and has one line in Tamil. The script of the writing, both Tamil and Kannada may be assigned to the 11th or 12th century A. D.

The texts of the inscriptions (Nos. I to XVIII) are given below.

## Nos. I and II (Brahmi script-Tamil language)

Label A. Vindai-ūra.

B. S'aiya-aḷan.

C. Kāviya.

## No. III (Tamil)

1. Svasti S'ri (11*) Veṉbu-nāṭṭu-k-kuṟaṇḍi-aṣṭa-upa-

2. - Vāsi - baṭārar - māṇākkar - Guṇasēna-dēvar Guṇa-

3. -Sēna-dēvar- Māṇākkar- Kanakavira-p-periyaḍika-

4. -ḷ-Nāṭṭāṟṟu-p- puṛattu-amirta-parākki-

5. -rama - na (1) lūrāṇa - Kuyirkuḍi- ūrār-pērā-

6. -1- s'eyvitta-tirumēni (1*) paḷḷi-

7. -c-civikaiyār-rakṣai II

*Translation:*

Hail! prosperity! Gunasenadevar (was) the pupil of Aṣṭopavasi Bhaṭṭāra of Kuṛaṇḍi in Veṇbunāḍu (District). Kanakavira-p-periya-ḍikaḷ (Who was) the pupil of Gunasena dēva caused this holy image to be made on behalf of the residents of Kuyiṛkuḍi (village) also called Amiṛta parākrama nattur in Nāttāṟṟu-p-puṛam. May this be under the protection of the Paḷḷi-c-civikaiyār.

## No. IV. (Tamil)

1. Svasti-S'ri (11*) Parāntaka - paṛvata-māyina-te-

2. -(n-va-)-ṭṭai-p-perum-paḷḷi

3. -k-kuṛaṇḍi-aṣṭa-upa-vāsi-baṭāra-

4. -r-māṇākkar- māganandi-p-pe
5. -riyār- nāṭṭaṟṟu-p-purat-
6. -tu-nāttār-pēral-s'eyvich
7. -cha-tirumēni 11l- S'ri-paḷḷi-c-
8. -ciyikaiyār rakṣai 11-

*Translation* :

Hail ! prosperity ! The perum-palli (Great temple and Monastry) of Tenvaṭṭai (Southern region) also called Parāntaka-parvata-Māganandi-p-periyār disciple of Aṣṭopavāsi Bhaṭṭāra caused this holy image to be made on behalf of the nāṭṭār (residents of the district) of Nāṭṭārruppuṟam. May this be under the protection of the Sri Paḷḷi-ch-civikaiyar.

## No., V. (Tamil)

1. .........nāṭṭu-k-kuraṇdi-t- tirukkāṭ - tām--paḷḷi-k-kanakanandi-p-

2. (patāra) r-Abhinandana-baṭārar-a- var māṇākkar-Arimaṇḍala-baṭārar-

3. Abhinandana-batārar - s'eyvitta - tiru-mēni

*Translation* :

..........1.(Kanaka nandi bhaṭṭara of Tiru-kkāttāmpaḷḷi (Monastry) of Kuraṇḍdi-in

vembunādu-Abhinandana bhaṭṭāra-His disciple was Arimaṇḍala bhaṭṭāra. The holy image caused to be made by Abhinandana bhaṭṭāra.

## No. VI. (Tamil)

1. Svasti S'ri (11*) veṇbu-nāṭṭu-k-kuraṇdi
2. -t-tirukkāṭṭām-paḷḷi-k-
3. -Guṇas'ēna-devar-mānākkar-Va-
4. -rtta-māna-p-paṇḍitar-mānāk-
5. -kar-Guṇasēna-p-periya-
6. -ḍikaḷ-s'eyvitta-ti
7. -rumēni- (?)—

*Translation* :

Hail ! Prosperity ! The holy image caused to be made by Guṇasena Periyaḍikaḷ disciple of Vardhamāna Paṇḍitar (who was in turn) the disciple of Gunasena deva of Tirukkaṭṭām-paḷḷi in Kuraṇḍi in Veṇbunāḍu.

## No. VII. (Tamil)

1. Svasti S'ri (11x) Ippaḷḷi-yuḍaiya-Gu-
2. ṇasēna-dēvar-saṭṭan- Deyva-
3. bala dēvan- s'eyvitha tirumēni 1 (1x)

*Translation* :

Hail! Prosperity! The holy image caused to be made by Dėyvabaladēva the saṭṭan (chief disciple) of Guṇasēnadēva of this paḷḷi (monastry)

### No. VIII. (Tamil)

1. Svasti S'ri (11*) Ippaḷḷi-āḷ-
2. -kinṟa-Guṇasēnadēvar-saṭṭa (n)
3. -Andalaiyān.Kaḷakkuḍi (ta) n-vai
4. -Kai-Andalaiyān......(Kai) yāli (yai)
5. -C. sārtti-s'eyvitta-tiru-
6. -mēni III

*Translation* :

Hail! Prosperity! Andalaiyān the s'aṭṭan (chief disciple) of Guṇasēnadēvar who presides over this paḷḷi (Monastry). The holy image caused to be made by Andalaiyān of Kaḷakkudi.........on behalf of ......Kaiyāli............

### No. IX. (Tamil)

1. S'ri-Achcha-ṇandi
2. tāyār-Gunamati
3. yār-s'eyvit-
4. ta-tirumēni-S'ri (11*)

*Translation:*

The holy image caused to be made by Gunamatiyār mother of Sri Achanandi. Prosperity!

### No. X. (Tamil)

1. Svasti-S'ri (11*) Ippaḷḷi-udaiya-Gu-
2. nasēna-dēvar-sāṭṭan-Andalaiyān-
3. malai-tan-manākkan-Achān-Sri pā -lanai
4. c-sārtti-s'evitta-tirumēni (11*)

*Translation:*

Hail! Prosperity! The holy image caused to be made by Andalaiyān malai (who was) the s'aṭṭan (chief disciple) of Guṇāsenadeva of this paḷḷi (monastry) on behalf of Achān Sripalan, his nephew (or son-in-law).

### No. XI. (Tamil)

1. Svasti-s'ri (11*) Ippaḷ-
2. ḷi-uḍaiya-Guṇasēnadē-
3. -var-s'aṭṭan-Singaḍai-
4. -p-puṛattu-Kaṇḍan-ne (ri)
5. baṭṭan-s'eyvitta
6. tirumēni- Sri (11*)

*Translation:*

Hail! Prosperity! The holy image caused to be made by Kaṇḍan-nēri-bhaṭṭar of Siṅgaḍaip-puṛam, the s'aṭṭan (chief disciple) of Guṇasēna-devar of this Paḷḷi (monastry)

## No XI1 (Tamil)

1. Sri (11*) Mizaḷai-k-Kūṛṛattu-Pāni-riḍai
2. -yan-veḷān-saḍaivanai-c-sārtti-
3. I (n) nā-mānavāḍa-niṭṭappu-ṇāṭṭu-nā
4. -(Kū) r- Saḍāiyappa (n)-seda vitta-dē
5. -var. I tanattu......ta.......tāyār-(s'ey).
6. -davitta- tiṛumēni (11 *)

*Translation:*

Prosperity! Image of the dēvar, caused to be made by S'aḍaiyappan of Nākūr in Innamā ṇava-niṭṭappunāḍu (?) (district) on behalf of Vēlān Saḍaiyan the iḍaiyan (sheperd) of Pārūr in Mizalai-k-kuṛṛam (division)

The holy image......caused to be made by...... ......the mother.........(11*)

## No XIII (Tamil)

1. Sri (11*) Veṇbu-naṭṭu
2. tirukkuraṇḍi-
3. pādhamūlattāṉ-
4. amittin-ma(rai)-
5. -Kal-kanakana (n) di-s'e-
6. -vicha-tirumēṉi (11*)

*Translation*:

Prosperity! The holy image caused to be made by Amittin Maraikaḷ Kanakaṉandi, the pādamūlattān of Tirukkuṛaṇḍi in Veṇbunāḍu (district).

1. S'vasti S'ri (11*) Ippa-
2. -ḷḷi uḍaiya-Guṇa-
3. -sēna-devar-s'aṭṭan-
4. Araiyan-Kāvidi-(s'a)-
5. ngaṇambi-yai-c-
6. Charti-ch-Saivicha-
7. tirumēni (11*)

*Translation*:

Hail! Prosperity! The holy image caused to be made by Ariyan Kavidi, the sāṭṭan (chief disciple) of Guṇasēnadevar of this Paḷḷi (monastry), on behalf of Sanga-nambi (11*)

## No XV (Tamil)

1. S'vasti S'ri (11* Ippaḷḷi.........
2. ......Guṇasēna dēvar...māṇak.........
3. ..................k. kar-chandraprabha
4. .......................
5. ..........................
6. ....................vitta....

*Translation:*

Hail! Prosperity! (The holy image) caused to be made by.......................... ........chandraprabha......the disciple of ...................the disciple of Guṇasēna devar of this Paḷḷi (monastry)

## NoXVI (Tamil)

1. Ivvaṇḍu - iraṭṭaiyān.
2. Sri parama..............ri-rakṣai

*Translation :*

line 1 "In this year......Irattaiyān...

line 2 'May this be under the protection of Sri parama.........'

## No XVII Kannada and Tamil)

1. Āriyadēvaru
2. Āriyadēvar
3. Mūlasangha Beḷaguḷa Balachan-
4. dradēvaru Nēmidēvaru Sū (ryya)
5. Pratā (pa) Ajitasena dēvaru
6. Gōvadhana dēvaru...........
7. ra māḍi...sa (ta) rū II

*Translation* :

Ariyadevaru. Āriyadēvar. Mūla-saṇgha. Beḷaguḷa-Bala-chandradēvaru. Nēmidēvaru. Suṛya-pratapa. Ajitasēnadevaru...........
having performed, died.